# தின பூமி

thinaboomi.com

சேலம், செவ்வாய், டிசம்பர் 06, 2022 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**இந்தோனேசியாவில் திடீரென வெடித்து சிதறிய எரிமலை: 2 ஆயிரம் பேர் வெளியேற்றம்**

...2-ம் பக்கம்

**ஜி-20 சின்னம் விவகாரம்: மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி எதிர்ப்பு**

...3-ம் பக்கம்

**அண்டர்-19 டி20 உலக கோப்பை: ஷபாலி வர்மா தலைமையிலான இந்திய மகளிர் அணி அறிவிப்பு**

...7-ம் பக்கம்






பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் நேற்று, புதுடெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஜி-20 மாநாடு தொடர்பான அனைத்துக்கட்சி கூட்டத்தில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

### அறப்பணிகள் மதமாற்றத்தை நோக்கமாக கொண்டிருக்கக்கூடாது:

# பரிசு பொருட்களை வழங்கி மதமாற்றம் செய்வது ஆபத்து

## பொதுநல வழக்கில் சுப்ரீம் கோர்ட் கருத்து

புதுடெல்லி, டிச. 06-

மதம் தொடர்பான அறப்பணிகள் மதமாற்றத்தை நோக்கமாக கொண்டிருக்கக் கூடாது என்றும் பணம், பரிசுப் பொருட்களை வழங்கி மதமாற்றம் செய்வது ஆபத்தானது என்றும் தெரிவித்துள்ள சுப்ரீம் கோர்ட், மதமாற்றம் தொடர்பாக மாநிலங்களிடம் இருந்து விரிவான தகவல்களை பெற்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

**பொதுநல வழக்கு...**

மத மாற்றத்திற்கு எதிராக பா.ஜ.க. தலைவர் அஷ்வினி குமார் உபாத்யாய் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல வழக்கு தொடர்ந்துள்ளார். பணம், பரிசுப்பொருட்கள் உள்ளிட்டவற்றை அளித்து செய்யப்படும் மதமாற்றம் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என அறிவிக்க வேண்டும். மதமாற்றம் தொடர்பாக ஏற்படும் தீங்குகள் அதன் தொடர் விளைவுகளை கட்டுப்படுத்த மத்திய அரசு தவறி விட்டது. மோசடியான மதமாற்ற சம்பவங்களை கட்டுப்படுத்தும் வகையில், அறிக்கை தயார் செய்தும் மற்றும் சட்டமசோதாவை உருவாக்கவும் மத்திய சட்ட ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறியிருந்தார்.

**மீண்டும் விசாரணை...**

இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதி எம்ஆர் ஷா தலைமையிலான அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அஷ்வினி குமார் உபாத்யாய் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு உகந்தது அல்ல எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை நிராகரித்த நீதிபதிகள், முக்கிய கருத்துக்களை தெரிவித்தனர்.

**பிரமாண பத்திரம்...**

குறிப்பாக மத அறப்பணிகள் என்பது மத மாற்றத்தை நோக்கமாக கொணடிருக்கக் கூடாது. பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் அளித்து செய்யும் மதமாற்றம் மிகவும் ஆபத்தானது, அரசியல் சாசனத்தின் அடிப்படைக்கு எதிரானது என்று நீதிபதிகள் தெரிவித்தனர். மேலும் மத மாற்ற ஒழிப்பு சட்டங்கள் பற்றி மாநில அரசுகளிடம் இருந்து விரிவான தகவலகளை சேகரித்து அதுபற்றி பிரமாண பத்திரம் ஒன்றை தாக்கல் செய்யும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டனர்.

**பல மாநிலங்களில்...**

ஏற்கனவே இந்த வழக்கில் மத்திய அரசு ஒரு பதில் மனுவை தாக்கல் செய்திருந்தது. அதில், கட்டாய மதமாற்றத்திற்கு எதிராக மத்திய பிரதேசம், ஒடிசா மாநிலங்களில் இயற்றப்பட்டுள்ள சட்டத்தை ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் உறுதி செய்ததை குறிப்பிட்டிருந்தது. ஒடிசா, மத்திய பிரதேசம், குஜராத், சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், உத்தரகாண்ட், உத்தர பிரதேசம், கர்நாடகம், அரியானா ஆகிய மாநிலங்களில் கட்டாய மதமாற்ற தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளதையும் மத்திய அரசு தனது பதில் மனுவில் தெரிவித்த நிலையில், இந்த வழக்கில் நேற்று மத்திய அரசு விரிவான பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டு, விசாரணையை டிசம்பர் 12-ம் தேதிக்கு (வரும் திங்கட்கிழமை) தள்ளி வைத்தனர்.

### குஜராத் தேர்தல் - அகமதாபாத் வாக்குச்சாவடியில்

# மக்களுடன் வரிசையில் நின்று வாக்களித்தார் பிரதமர் மோடி

அகமதாபாத், டிச. 06-

குஜராத் சட்டப்பேரவைக்கு நேற்று நடைபெற்ற 2-ம் மற்றும் இறுதிக்கட்ட தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ரணிப்பில் உள்ள வாக்குச்சாடியில் வாக்களித்தார். அவரது வருகையை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



குஜராத் மாநிலத்தில் கடந்த 27 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே, குஜராத்தில் மொத்தம் உள்ள 182 தொகுதிகளில் முதல் கட்டமாக 89 தொகுதிகளுக்கு கடந்த 1-ம் தேதி வாக்குப்பதிவு நடந்தது. இந்நிலையில், இரண்டாம் கட்டமாக 93 தொகுதிகளுக்கு நேற்று காலை 8 மணி முதல் தொடங்கிய வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

93 தொகுதிகள் குஜராத்தின் மத்திய பகுதி மற்றும் வடக்குப் பகுதியில் இந்த தொகுதிகள் அமைந்துள்ளன. மொத்தம் 2.54 கோடி வாக்காளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வாக்களிப்பதற்காக 14 ஆயிரத்து 975 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இத்தேர்தலில் 833 வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள். பா.ஜ.க, காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய 3 கட்சிகளுக்கு இடையே தான் போட்டி நிலவுகிறது. பிரதமர் மோடி 31 பிரசார கூட்டங்களில் கலந்து கொண்டார். இரு கட்ட தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் வரும் 8-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளது.

குஜராத் சட்டமன்ற தேர்தலுக்கான 2-ம் கட்ட வாக்குப்பதிவு தேர்தலில் வாக்களித்த பிரதமர் மோடி, நேற்று அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ரணிப்பில் உள்ள வாக்குச்சாவடியில் பொது மக்களுடன் நின்று தனது ஜனநாயக கடமையை ஆற்றினார். வாக்கு செலுத்திய பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது,

நான் தேர்தல் கமிஷனுக்கு என் இதயப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முழு உலகத்தில் பாரத திருநாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்கின்ற உன்னதமான பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காக இங்கே தேர்தலில் பணியாற்றுகின்ற அணைவருக்கும் நான் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குஜராத் மக்களால் ஜனநாயக திருவிழா விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. நாட்டின் பெருமை, சிறப்பு ஆகியவற்றையெல்லாம் அதிகப்படுத்தும் வண்ணம் இந்த தேர்தலில் பெருமளவில் பங்கெடுத்துக்கொண்டு வாக்களித்து வருகிறார்கள். ஜனநாயக கடமையாற்றும் ஒவ்வொரு குடிமகனுக்கும் நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

பிரதமர் நரேந்திர மோடியைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், ஆம் ஆத்மி முதல்வர் வேட்பாளர் இசுதன் காத்வி, குஜராத் காங்கிரஸ் தலைவர் ஜகதீஷ் தக்கோர், கிரிக்கெட் வீரர் இர்ஃபான் பதான், ஹார்திக் பாண்டியா, க்ருனால் பாண்டியா ஆகியோரும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் தங்கள் வாக்குகளை செலுத்தி ஜனநாயக கடைமையை நிறைவேற்றினர்.

### வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி

# அடுத்த 3 நாட்களில் புயலாக மாறுகிறது

## டிசம்பர் 8-ம் தேதி 13 மாவட்டங்களுக்கு 'ரெட் அலர்ட்'

சென்னை, டிச. 06-

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த மூன்று நாட்களில் புயலாக உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனை அடுத்து தமிழகத்தில் டிசம்பர் 8-ம் தேதி சென்னை உள்ளிட்ட 13 மாவட்டங்களில் மிக அதி கனமழைக்கான 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது.

அந்தமான் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. முன்னதாக இந்த தாழ்வு பகுதி அந்தமான் நோக்கி வருமா என்ற சந்தேகம் இருந்தது. ஏனென்றால் இந்த தாழ்வு பகுதி சீன கடல் பகுதியிலேயே முழுமையாக உருவாகும் முன் வலுவிலக்கும் வாய்ப்புகளும் இருந்தன.

இந்த நிலையில்தான் தற்போது இந்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. வரும் நாட்களில் இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவெடுக்கும். காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று வங்கக் கடலில் டிசம்பர் 8ம் தேதி புயலாக உருவாக வாய்ப்பு உள்ளது. 3 நாட்கள் பின் இது புயலாக மாற உள்ளது. அடுத்த 48 மணி நேரத்தில் இந்த தாழ்வு பகுதி நகர தொடங்கும். தாழ்வு மண்டலமாக இது வலுப்பெற்று மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து செல்லும்.

காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியை அடைந்து அங்கு வலிமைபெற்று மையம் கொண்டு நிற்கும். இது நிலத்தில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ளது. இதன் காரணமாக புயலாக மாறுவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் நிலவி வருகின்றன. இதனால் 3 நாட்களில் கண்டிப்பாக இது புயலாக உருவெடுக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் புதிதாக உருவாகும் புயலுக்கு மாண்டஸ் என பெயர் வைக்கப்பட உள்ளது. வங்கக் கடலில் உருவாகும் புயலுக்கு ஐக்கிய அரபு அமீரகம் பரிந்துரைத்த பெயர் வைக்கப்பட உள்ளது. காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக 8-ம் தேதி தமிழகத்தின் சில இடங்களில் ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுத்து சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

8ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம்,

(கடைசி பக்கம் பார்க்க)

### இன்று பாபர் மசூதி இடிப்பு தினம்:

# தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பணியில் 1.20 லட்சம் போலீசார்

சென்னை, டிச. 06-

பாபர் மசூதி இடிப்பு தினத்தை முன்னிட்டு இன்று தமிழகம் முழுவதும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள அயோத்தியில் இருந்த பாபர் மசூதி கடந்த 1992- ஆம் ஆண்டு டிசம்பர் 6-ஆம் தேதி இடிக்கப்பட்டது. நாடு முழுவதும் பெரும் பதற்றத்தை இந்த பாபர் மசூதி இடிப்பு சம்பவம் ஏற்படுத்தியது.பாபர் மசூதி இடிப்பு தினமான டிசம்பர் 6 ஆம் தேதி அசம்பாவித சம்பவங்கள் எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நாடு முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆண்டு தோறும் எடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக தமிழகத்திலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்களில் பாதுகாப்பினை அதிகரிக்க தமிழக காவல்துறை டிஜிபி சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் பாபர் மசூதி இடிப்பு தினமான இன்று (டிசம்பர் 6-ஆம் தேதி) 1 லட்சத்து 20 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுபோக முக்கியமான இடங்களில் போலீசார் தீவிர ரோந்து பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

தலைநகர் சென்னையில் மட்டும் சுமார் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். திருவல்லிக்கேணி, மயிலப்பூர், பெரியமேடு, பாரிமுனை நகரின் முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னையின் முக்கிய வர்த்தக பகுதியாக விளங்கும் தி.நகரில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. போலீசார் ரோந்து பணிகளை அதிகரிக்கவும் உயர் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். குறிப்பாக இரவு நேரங்களில் வாகன சோதனையை கூடுதல் கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தங்கும் விடுதிகள், லாட்ஜகளில் சந்தேகத்திற்கு உரிய வகையில் யாராவது தங்கியிருக்கிறார்களா? என்பதை கண்டறியும் சோதனை நடத்தப்பட இருக்கிறது. மத வழிபாட்டு தலங்களில் பாதுகாப்பு பணியை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. கார்த்திகை தீப திருவிழா நாள் என்பதால் இரவு நேரங்களில் பக்தாகள் கூட்டம் அதிகமாக இருக்கும் எனவே கோவில்களில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பேருந்து ரயில் நிலையங்களில் பயணிகளின் உடமைகளை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட இருக்கிறது. மோப்ப நாய்களும் ரயில் நிலையங்களை சுற்றி வரும்.போலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட இருக்கின்றனர். சிசிடிவி கேமரா காட்சிகளையும் உன்னிப்பாக

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழகம் முழுவதும் இதுவரை

# மின் இணைப்புடன் ஆதாரை 60.27 லட்சம் பேர் இணைத்தனர்

சென்னை, டிச. 06-


தமிழகம் முழுவதும் இதுவரை 60.27 லட்சம் பேர் மின் இணைப்புடன் தங்கள் ஆதார் எண்ணை இணைத்துள்ளனர்.

தமிழகத்தில் மின்சார இணைப்புடன் ஆதார் எண்களை இணைக்கும் பணி கடந்த மாதம் இறுதியில் தொடங்கியது. வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக கட்டிடங்கள் மற்றும் விசைத்தறி பயன்பாட்டாளர்கள் தங்களது மின் இணைப்புடன் ஆதார் எண்ணை இணைக்க வேண்டும் என மின்சார வாரியம் அறிவித்தது. இதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. மின் இணைப்புடன் ஆதாரை இணைக்க இந்த மாதம் 31-ந் தேதி வரை அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து மின் வாரிய அலுவலகங்களில் பொது மக்கள் நேரில் சென்று ஆதார் எண்ணை இணைத்து வருகின்றனர்.


ஆதார் எண் நகல், அதில் உள்ள செல்போன் எண் கொண்ட போனை எடுத்து சென்றால் போதுமானது. மின்சார அலுவலகங்களில் இதற்காக சிறப்பு கவுண்டர்கள் திறக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. நேரடியாகவும், ஆன்லைன் வழியாகவும் இணைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தற்போது வரை 60.27 லட்சம் மின் இணைப்புகள் ஆதாருடன் இணைக்கப்பட்டுள்ளன. ஞாயிறன்று மட்டும் 2811 சிறப்பு கவுண்டர்கள் மூலம் 83 ஆயிரமும், ஆன்லைன் வழியாக 1.55 லட்சமும் இணைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மின் இணைப்புடன் ஆதார் எண் இணைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் தற்போது வரை 60.27 லட்சம் மின் இணைப்புகளுடன் ஆதார் இணைக்கப்பட்டுள்ளதாக தமிழக மின்வாரியம் தெரிவித்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -33.90 | 4.95 |
| பாயிண்ட் 62834.6 | பாயிண்ட் 18701.05 |



**தங்கம்**
1 சவரன் ₹40,360
1 கிராம் ₹5,045



**வெள்ளி**
1 கிலோ ₹72,500
1 கிராம் ₹72.50

**டாலர்** ₹81.83

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# இந்தோனேசியாவில் திடீரென வெடித்து சிதறிய எரிமலை..!

## 2 ஆயிரம் பேர் வெளியேற்றம்

**ஜகார்த்தா, டிச. 06-**

இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு காரணமாக 2 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள லுமாஜாங் நகரில் அந்நாட்டின் மிகப் பெரிய எரிமலையான செமேரு உள்ளது. சுமார் 12 ஆயிரம் அடி உயரம் கொண்ட இந்த எரிமலை திடீரென்று வெடித்து சிதறியது. கன மழை காரணமாக செமேரு எரிமலையின் குவிமாடம் சரிந்தது. இதனால் எரிமலையில் நெருப்பு குழம்பு வெளியேற தொடங்கியது.

எரிமலையில் இருந்து சாம்பல் புகை மற்றும் நெருப்பு குழம்பு வெளியாகி



வருகிறது. 5 ஆயிரம் அடி உயரத்துக்கு சாம்பல் புகை மேலே எழும்பியுள்ளது. அங்குள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் எரிமலை சாம்பல் பரவியுள்ளது. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சும்பர்வுலு, சுபிது ராங் கிராமங்களில் மீட்பு குழுவினர் விரைந்து சென்றனர்.

அங்கு வீடுகள் மற்றும் கட்டிடங்கள் மேலே எரிமலை குப்பைகள் கிடந்தன. எரிமலை வெடிப்பு காரணமாக 2 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று தங்க வைக்கப்பட்டு உள்ளனர். அப்பகுதிகளில் பெரும்பாலான சாலைகள் மூடப்பட்டுள்ளன. எரிமலை வெடிப்பால் சாம்பல் புகை மற்றும் நெருப்பு குழம்பு வெளியேற்றத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள்.

# மியான்மரில் 7 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மரண தண்டனை

**நேபிடாவ், டிச. 06-**

துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் மியான்மரில் பல்கலைக் கழக மாணவர்கள் 7 பேருக்கு அந்த நாட்டு ராணுவ கோர்ட்டு மரண தண்டனை விதித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

மியான்மரில் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் ராணுவம் ஆட்சியை கைப்பற்றியதில் இருந்து 100-க்கும் மேற்பட்டோருக்கு ராணுவ கோர்ட்டு மரண தண்டனை விதித்துள்ளது. ராணுவ ஆட்சிக்கு எதிரானவர்களை ஒடுக்குவதற்கு மரண தண்டனையை ஒரு ஆயுதமாக மியான்மர் ராணுவம் பயன்படுத்துவதாக ஐ.நா. குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில் மியான்மரில் பல்கலைக் கழக மாணவர்கள் 7 பேருக்கு அந்த நாட்டு ராணுவ கோர்ட்டு மரண தண்டனை விதித்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. வங்கியில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குற்றம்சாட்டி அவர்களுக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நியாயமான விசாரணையின் அடிப்படை கோட்பாடுகளை மீறியும், சுதந்திரம் மற்றும் பாரபட்சமின்மைக்கான முக்கிய நீதித்துறை உத்தரவாதங்களுக்கு முரணான வகையிலும் ராணுவம் ரகசிய கோர்ட்டுகள் நடவடிக்கைகளை தொடர்கிறது. மாணவர்களுக்கு மரண தண்டனை விதித்திருப்பது ராணுவத்தின் பழிவாங்கும் செயலாகும்.

7 மாணவர்கள் தவிர்த்து 4 இளைஞர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்களுடன் சேர்த்து இதுவரை 139 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# ஜி-20 தலைமை பொறுப்பு ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கு கிடைத்த பெருமை

## எடப்பாடி பழனிசாமி பேட்டி

**சென்னை, டிச. 06-**

ஜி20 தலைமை பொறுப்பு என்பது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய அளவுக்கு பெருமைக்குரியதாகும் என்று முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

உலக அரங்கில் வளர்ச்சி அடைந்த மற்றும் வளரும் நாடுகளின் பொருளாதாரங்களை ஒன்றிணைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஜி20 அமைப்பு நாடுகளின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி வெற்றி பெற்ற பிரதமர் மோடிக்கு, அ.தி.மு.க. சார்பாக எனது நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதமரின் கடின உழைப்பால், உலகெங்கிலும் உள்ள நாடுகளின் உயர்மட்ட பிரமுகர்களுடன் நல்லுறவைப் பேணி, இந்தியாவின் நற்பெயரை உயர்த்தியதன் காரணமாக, ஜி20ன் தலைமைப் பொறுப்பு சாத்தியமானது. இது 130 கோடி இந்தியர்களை தலைநிமிரச் செய்துள்ளது. ஜி20 தலைவர் பதவியை நமது நாடு பெற்றிருப்பது உலக அரங்கில் இந்தியாவிற்கு கிடைத்த ஒரு அங்கீகாரம் ஆகும். மேலும் ஜி20 தலைமைப் பொறுப்பு என்பது இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய அளவுக்கு பெருமைக்குரியதாகும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 118.91 அடியாக உயர்வு

**மேட்டூர், டிச. 06-**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 8 மணி அளவில் 118.91 அடியாக உயர்ந்தது.

கர்நாடக மற்றும் தமிழக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக உள்ளது.


மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் காலை 10,417 கன அடியாக நீர்வரத்து சரிந்தது. நேற்று காலை நீர்வரத்து சற்று குறைந்து விநாடிக்கு 9,536 கன அடி வீதம் தண்ணீர் அணைக்கு வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு 5 ஆயிரம் கன அடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 600 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது.

இதனிடையே டெல்டா மாவட்டங்களில் பாசனத் தேவை குறைந்துள்ளதால் நீர் திறப்பு விநாடிக்கு 2,600 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதில் நீர்மின் நிலையங்கள் வழியாக விநாடிக்கு 2,000 கன அடி வீதம் தண்ணீர் காவிரி ஆற்றிலும், கிழக்கு மேற்கு கால்வாயில் 600 கன அடி வீதம் தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளன.

அணைக்கு வரும் தண்ணீரை விட அணையில் இருந்து குறைவாக தண்ணீர் திறந்து விடப்படுவதால் அணையின் நீர்மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது.

நேற்று முன்தினம் காலை 118.62 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 8 மணி அளவில் 118.91 அடியாக உயர்ந்தது.

# பத்ம பூஷன் விருது பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் மரணம்




**பாரிஸ், டிச. 06-**

புகழ்பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் டொமினிக் லேபியர்( 91) வயது முதிர்வால் காலமானார்.

டொமினிக் லேபியர் அமெரிக்க எழுத்தாளர் லாரி காலின்ஸுடன் இணைந்து ஆறு புத்தகங்களை எழுதினார். லேபியர் - காலின்ஸுடன் இணைந்து இயற்றிய ஆறு புத்தகங்கள் 50 மில்லியன் பிரதிகள தாண்டி விற்பனையாகியுள்ளன. அவர்கள் இயற்றிய இஸ் பாரிஸ் பர்னிங்? என்ற புத்தகம் உலகப் புகழ் பெற்றது.

கொல்கத்தாவில் ஒரு ரிக்சாக்காரர் வாழ்க்கையில் படும் கஷ்டங்களைப் பற்றி எழுத்தாளர் டொமினிக் லேபியர் எழுதி, 1985-ல் வெளியான சிட்டி ஆப் ஜாய் என்ற நாவல் பெரும் வரவேற்பை பெற்றது. அந்த நாவலை தழுவி ஒரு திரைப்படம் 1992-ல் வெளியானது. சிட்டி ஆப் ஜாய் நாவல் மூலம் தனக்கு கிடைத்த ராயல்டிகளில் பெரும்பகுதியை அவர் இந்தியாவில் பல்வேறு மனிதாபிமான திட்டங்களுக்காக நன்கொடையாக வழங்கி உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

2008-ம் ஆண்டு குடியரசு தினத்தில், இந்தியாவின் மூன்றாவது உயரிய சிவிலியன் விருதான பத்ம பூஷன் விருது லாபியருக்கு வழங்கி கவுரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக இந்தியா விளங்குகிறது: ஜெர்மனி

**பெர்லின், டிச. 06-**

இந்தியாவில் பல சமூக சவால்கள் இருந்த போதிலும் உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக இந்தியா விளங்குகிறது என்று ஜெர்மனி தெரிவித்துள்ளது.

ஜி7 நாடுகள் குழுவின் தலைமைப் பொறுப்பேற்ற பின், இந்தியாவிற்கு வருகை தர உள்ளதாக ஜெர்மனியின் வெளியுறவுத்துறை அமைச்சர் அன்னாலெனா பேர்பாக் கூறினார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

ஜி20 தலைவர் பதவியை இந்தியா ஏற்ற சில நாட்களில் இந்த பயணம் அமையவுள்ளது. இந்திய பயணத்தின் போது தற்போதைய சூழலில் அவசர கவனம் செலுத்த வேண்டிய விஷயங்களான காலநிலை நெருக்கடி மற்றும் விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கைப் பராமரித்தல் ஆகியவை குறித்து முக்கிய பேச்சுவார்த்தை நடைபெறும்.

வளர்ந்து வரும் பொருளாதார சக்தியாகவும், உறுதியான ஜனநாயகமாகவும் உள்ள இந்தியா அனைத்து உள் சமூக சவால்கள் இருந்த போதிலும் உலகின் பல நாடுகளுக்கு முன்மாதிரியாகவும் பாலமாகவும் உள்ளது. உக்ரைனில் ரஷ்ய ஆக்கிரமிப்புப் போருக்கு எதிராக ஜி20 உள்ளது, இறுதியில் இந்தியாவிற்கும் நன்றி. இந்தியா ஜெர்மனியின் கூட்டணி நாடாக உள்ளது என்று தெரிவித்தார்.

# பள்ளிகள் திறந்து 6 மாதங்களுக்கு பிறகு புதுச்சேரியில் இலவச மாணவர் சிறப்பு பேருந்துகள் தொடக்கம்

**புதுச்சேரி, டிச. 06-**

பள்ளிகள் திறந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு புதுச்சேரி, காரைக்காலில் இலவச மாணவர் சிறப்பு பேருந்துகள் திட்டம் நேற்று துவங்கியது. மதிய உணவுடன் முட்டை தரும் பணியும் துவங்கப்பட்டுள்ளது.

மாணவர் சிறப்பு பேருந்துகள் கடந்த 2010-ம் ஆண்டு முதல் புதுச்சேரி அரசால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாணவர்கள் ஒரு ரூபாய் கட்டணத்தில் பள்ளிகளுக்கு பயணிக்கலாம். கிராமத்திலிருந்து நகரிலுள்ள பள்ளிக்கு படிக்க வரும் ஏழை மாணவ, மாணவிகள் அதிகம் பயன்பெற்றனர். இரண்டு ரூபாய் மட்டுமே செலவிட்டனர். புதுச்சேரி, காரைக்காலில் சுமார் 25 ஆயிரம் மாணவ, மாணவிகள் இத்திட்டத்தால் பயனடைந்தனர்.

ஆனால், கொரோனா தொற்று காரணமாக 2020ம் ஆண்டு முதல் மாணவர் சிறப்பு பேருந்து இயக்கப்படாமல் இருந்தது. புதுச்சேரியில் நடப்பு கல்வியாண்டில் கடந்த ஜூன் மாதம் 23ம் தேதி வகுப்புகள் திறக்கப்பட்டன. ஆனால் இதுவரை மாணவர் பேருந்து இயக்கப்படவில்லை. இதனால் மாணவ, மாணவிகள் பாதிப்புக்கு உள்ளானார்கள். கிராமத்திலிருந்து நகரத்துக்கு வரும் ஏழை குழந்தைகள் தினமும் ரூ.50 வீதம் செலவழித்து அரசு பள்ளிக்கு வந்து படிப்பது குடும்பத்துக்கு கூடுதல் சுமையானது.

புதுச்சேரியில் பெரும்பாலும் கிராமங்களில் இருந்து தனியார் பஸ்களே அதிகளவில் இயக்குவதுடன், கூடுதல் கட்டணத்தையும் செலுத்தி வருவதாகக் குறிப்பிடுகின்றனர். போக்குவரத்துத் துறையோ கூடுதல் கட்டணம் வசூலிப்பை தடுக்கவும் இல்லை. இந்நிலையில். பள்ளிகள் திறந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு புதுச்சேரி, காரைக்காலில் சிறப்பு பேருந்து இயக்குவது தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் துணைநிலை ஆளுநர் தமிழிசை, முதல்வர் ரங்கசாமி, கல்வியமைச்சர் நமச்சிவாயம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.


கல்வியமைச்சர் நமச்சிவாயம் கூறுகையில்: "ஒரு ரூபாய் பேருந்தை இலவசமாக இயக்க முடிவு எடுத்து செயல்படுத்தியுள்ளோம். புதுச்சேரி, காரைக்காலில் மாணவர் சிறப்பு பேருந்தில் இலவசமாக மாணவ, மாணவியர் பயணிக்கலாம். அத்துடன் மதிய உணவில் முட்டை நேற்று முதல் தரப்படுகிறது. வாரம் இரண்டு நாட்கள் முட்டை தருகிறோம். அதை மூன்று நாளாக மாற்ற கல்வி அதிகாரிகளுடன் கலந்து பேசி முடிவு எடுத்து செயல்படுத்தப்படும்" என்று தெரிவித்தார்.

# படிக்கட்டில் இருந்து தவறி விழுந்தார் அதிபர் புடின்..!

**மாஸ்கோ, டிச. 06-**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் படிக்கட்டில் இருந்து தவறி கீழே விழுந்துள்ளார். இதன்காரணமாக அவரது முதுகு தண்டுவடத்தில் காயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனினும் தற்போது அவரது உடல்நிலை சீராக இருப்பதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.


சில மாதங்களாக, அதிபர் புடின் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால், அவர் சிரமப்படுவதாகவும் உலக ஊடகங்களில் தொடர்ந்து செய்திகள் வெளியாகி வருகின்றன. ரஷ்ய அர



சாங்கம் இந்த செய்திகளை வதந்திகள் என்று கூறி வருகிறது. புடினுக்கு புற்று நோய் காரணமாக கடுமையான வயிற்றில் பிரச்சனை ஏற்பட்டதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

புடின் விழுந்தவுடன், மூன்று காவலர்கள் அவரை அருகில் இருந்த சோபாவில் உட்கார வைத்தனர். இதையடுத்து அவருக்கு சில மருந்துகள் கொடுக்கப்பட்டன. தற்போது அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும், நடப்பதில் அவருக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றும் கூறப்படுகிறது. இது குறித்து சிறப்பு மருத்துவர்கள் குழு விசாரணை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவரது உடல்நிலை சீராக இருப்பதால், மாஸ்கோவில் உள்ள ஒரு ஆய்வகத்திற்குச் சென்று அங்குள்ள விஞ்ஞானிகளை சந்தித்தார்.

**06-12-2022**




**மேஷம்:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புத்தாடை அணிகலன்கள் ஆகியவற்றை அணிவார், சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**ரிஷபம்:-** வாயை அடக்கி வம்புக்கு செல்லாதிருப்பது சுகம். பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். வீண் செலவுகளை குறைக்க புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும்.

**மிதுனம்:-** பெண்களால் ஆதாயம் அடைவீர்கள். பிறருக்கு விருந்து உபசாரம் செய்து மகிழ்வார்கள். வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும். அரசு பணியில் உள்ளவர்கள் பதவி உயர்வை எதிர்பார்க்கலாம்.

**கடகம்:-** தன்னம்பிக்கை, தைரியம் எல்லாம் ஓங்கும். அனைத்து செயல்பாடுகளும் அனுகூலமாய் அமையும். திருப்திகரமான தீர்த்த யாத்திரைகள் மகிழ்வு தரும். புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும்.

**சிம்மம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். மனதிற்கினிய நல்ல மனைவி அமைவாள்.

**கன்னி:-** நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் குழப்பம் ஏற்படும். அக்கம் பக்கத்தினருடன் அளவாகப் பழகுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் சாதகமான சூழல் உருவாகும்.

**துலாம்:-** பாக்கிய விருத்தி ஏற்படும். எல்லா விதத்திலும் பூரண சுகம் கிடைக்கும். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** எல்லா வளமும் பெறும் இனிய நாள். உல்லாசப் பயணங்களால் உள்ளம் மகிழும். புதுப்பெண்கள் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும். எதிரிகள் பணிவர்.

**தனுசு:-** கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. மனைவி, மக்களின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை.

**மகரம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தடைபடும் காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். எதிலும் துணிந்து இறங்க ஏற்றம் வரும். முயற்சியைக் கைவிடாதே, முயன்றால் வெற்றி உங்கள் பக்கம்.

**கும்பம்:-** எடுத்த காரியங்கள் அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். முகநூல் மூலம் புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**மீனம்:-** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். நண்பர்களுடன் சுமுகமாக இருத்தல் அவசியம். கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. வண்டி, வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை.

## வட கொரியாவில் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள்

# துப்பாக்கி, வெடிகுண்டு என பெயர் வைக்க அறிவுறுத்தல்

**பியாங்கியாங், டிச. 06-**

தங்கள் நாட்டின் கொள்கைகளை விளக்கும் வகையில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு வெடிகுண்டு, துப்பாக்கி என பெயர் வைக்குமாறு வடகொரிய அரசு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர், மென்மையான பெயர்களை வைக்காமல், இது போன்ற தேசபக்திப் பெயர்களை வைக்க வேண்டும் என்றும், நாட்டின் கொள்கை மற்றும் கருத்தியல் தொடர்புடைய பெயர்களாக இருக்க வேண்டும் என்றும் வட கொரிய அதிபர் கிம் ஜாங்-உன் உத்தரவிட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏராளமான ஏவுகணை சோதனைகளை நடத்தியும், அணு ஆயுத சோதனை நடத்தியும், அண்டை நாடுகளையும், உலக நாடுகளையும் அச்சுறுத்தி வரும் வட கொரிய அதிபர் கிம் ஜாங்-உன் பிறப்பித்திருக்கும் இந்த உத்தரவு நிச்சயம் அந்த நாட்டு மக்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் என்று கூறப்படுகிறது.

துப்பாக்கி, வெடிகுண்டு, செயற்கைக்கோள் போன்ற தேசபக்தி பெயர்களை வைக்காமல், மென்மையான பெயர்களை வைக்கும் பெற்றோருக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென் கொரியா - வட கொரியா இடையே பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது அந்நாட்டு மக்களை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த ஆண்டு, வட கொரியாவில், முன்னாள் அதிபர் கிம் ஜாங்-இல் நினைவு தினத்தை முன்னிட்டு, 11 நாள்கள் நாட்டில் யாரும் சிரிக்க கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**மரம் மனிதனின் உரம்**

# சபரிமலையில் 17 ஆயிரம் பக்தர்கள் தங்க மெகா விடுதி

**சபரிமலை, டிச. 06-**

கேரளாவில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை விழா நடந்து வருகிறது. இந்த ஆண்டு கொரோனா கட்டுப்பாடுகள் முழுமையாக விலக்கி கொள்ளப்பட்டதால் கோவிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருகிறார்கள். நடை திறந்த நவம்பர் 16-ந் தேதி முதல் நேற்று வரை 10 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். நேற்று முன்தினம் விடுமுறை நாள் என்பதால் கோவிலுக்கு இருமுடி கட்டி வந்த பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

சபரிமலை வரும் பக்தர்கள் தங்க கோவில் நிர்வாகம் சார்பில் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது கோவிலில் உள்ள விருந்தினர் மாளிகையில் பக்தர்கள் தங்க கூடுதல் அறைகள் திறக்



கப்பட்டு உள்ளன. இங்குள்ள அறைகளில் 454 அறைகளை பக்தர்கள் உடனடி முன்பதிவு மூலம் பெற்றுகொள்ளலாம். 104 அறைகளை ஆன்லைன் மூலம் பதிவு செய்யவும் கோவில் நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது.

சபரிமலைக்கு குழுவாக வரும் பக்தர்கள் தங்குவதற்கும் திருவிதாங்கூர் தேவசம் போர்டு நிர்வாகம் தற்போது கூடுதல் ஏற்பாடுகள் செய்துள்ளது. அதன்படி கோவிலில் உள்ள விருந்தினர் மாளிகையில் ஒரே நேரத்தில் 17 ஆயிரத்து 17 பேர் தங்க பிரமாண்ட அறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அறைகளில் குழுவாக வரும் பக்தர்கள் தங்கி இளைப்பாறி செல்லலாம் என கோவில் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

### சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரம்:

# விரைந்து நலம் பெற லல்லுவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, டிச. 06-**

சிங்கப்பூர் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்ட ராஷ்டிரிய ஜனதா தள கட்சித் தலைவர் லல்லு பிரசாத் விரைந்து நலம் பெற முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பல்வேறு உடல்நலப் பிரச்னையால் அவதிப்பட்டு வந்த லல்லுவுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் சார்பில் அறிவுறுத்தப்பட்டது. அவரது மகள் ரோஷ்னி ஆச்சார்யா தனது தந்தைக்கு சிறுநீரகத்தை தானம் கொடுக்க முன் வந்த நிலையில், அவருக்கு நேற்று வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தனது தந்தையும், மூத்த சகோதரியும் தற்போது நலமாக இருப்பதாக தேஜஸ்வி தெரிவித்துள்ளார். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்குப் பிறகு லல்லு ஐ.சி.யு.வுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் லல்லு பிரசாத் விரைந்து நலம் பெற முதல்வர் மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

முதுபெரும் சமூகநீதிப் போராளியும் ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சித் தலைவருமான லல்லு பிரசாத்துக்கு சிங்கப்பூர் மருத்துவமனையில் நடைபெற்ற சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை வெற்றியடைந்து நலமாக உள்ளதாக அறிகிறேன். அவர் விரைந்து நலம் பெற விழைகிறேன். இவ்வாறு அந்த பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

### குஜராத் சட்டசபை தேர்தல்:

# பிரதமர் மோடியின் தாயார் வாக்களித்தார்

**அகமதாபாத், டிச. 06-**

குஜராத் சட்டசபை தேர்தலை முன்னிட்டு பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் நேற்று தனது வாக்கை செலுத்தினார்.

குஜராத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. இதில் காந்திநகர் அருகே ரேசன் கிராமத்தில் உள்ள வாக்குச் சாவடிக்கு, பிரதமர் மோடியின் தாயார் ஹீராபென் மோடி, சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு தனது இளைய மகன் பங்கஜ் மோடியுடன் வருகை தந்தார். பிற குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் தமது வாக்கை அவர் பதிவு செய்தார். முன்னதாக நேற்று முன்தினம் குஜராத் வந்திருந்த பிரதமர் மோடி, தனது தாயாரை சந்தித்து ஆசி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# திருப்பதி கோயிலில் ஜனாதிபதி திரௌபதி முர்மு சாமி தரிசனம்

**திருப்பதி, டிச. 06-**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஜனாதிபதி திரௌபதி முர்மு நேற்று சாமி தரிசனம் செய்தார். மகா துவாரம் வழியாக தரிசனத்திற்கு சென்ற அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஜனாதிபதி திரௌபதி முர்மு விசாகப்பட்டினத்தில் இருந்து விமான மூலம் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு ரேணிகுண்டா விமான நிலையத்திற்கு வந்தடைந்தார். ஆந்திர கவர்னர் விஸ்வ பூஷன் அரிச்சந்திரன் ஆந்திர துணை முதல்வர் நாராயணசாமி மத்திய அமைச்சர் கிருஷ்ணன் ரெட்டி, கலெக்டர் வெங்கடரமண ரெட்டி, எஸ்.பி பரமேஸ்வர ரெட்டி மற்றும் முக்கிய பிரமுகர்கள் பூங்கொத்து கொடுத்து அவரை வரவேற்றனர். இதையடுத்து திருப்பதி வந்த ஜனாதிபதி பத்மாவதி கெஸ்ட் ஹவுஸில் தங்கினார்.

நேற்று காலை 9.25 மணிக்கு வராஹ சாமி கோவிலிலும், பின்னர் 9.30 மணிக்கு ஏழுமலையானையும் தரிசனம் செய்தார். மகா துவாரம் வழியாக தரிசனத்திற்கு சென்ற அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தேவஸ்தான செயல் அலுவலர் தர்மா ரெட்டி அவருக்கு லட்டு, தீர்த்த பிரசாதங்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து அலிப்பிரியில் உள்ள கோசாலையில் நடத்த கோ மந்திர பூஜையில் கலந்து கொண்டார். இதையடுத்து திருப்பதியில் உள்ள மகளிர் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவிகளிடம் உரையாடினார். ஜனாதிபதி வருகையையொட்டி திருப்பதி முழுவதும் 1400 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# பாராளுமன்றத் தேர்தலில் மெகா கூட்டணி அமைத்து வரலாற்று வெற்றி படைப்போம்

## எடப்பாடி பழனிசாமி சூளுரை

**சென்னை, டிச. 06-**

பாராளுமன்ற தேர்தலில் மெகா கூட்டணி அமைத்து வரலாற்று வெற்றி படைப்போம் என்று எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க.வினர் நேற்று ஜெயலலிதாவின் நினைவு நாளையொட்டி சபதமேற்றனர்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-வது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. நினைவு தினத்தை ஒட்டி சென்னை மெரினாவில் உள்ள அவரது நினைவிடத்தில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவருடன் முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் , கேபி முனுசாமி உள்ளிட்டோரும் மரியாதை செலுத்தினர். நினைவு தினத்தை அனுசரிக்கும் வகையில் அ.தி.மு.க. தலைவர்கள் கருப்பு சட்டை அணிந்து இருந்தனர்.

அதை தொடர்ந்து எம்.ஜி.ஆர். நினைவிடத்துக்கு செல்லும் நுழைவு வாயில் அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். உறுதிமொழியை எடப்பாடி பழனிசாமி வாசிக்க அவரை பின்தொடர்ந்து தொண்டர்கள் முழங்கினர்.

எதிரிகள் ஒருபுறம், துரோகிகள் மறுபுறம் என்றிருக்கும் சூழல் பொய்வழக்குகளை முறித்து சதிவலைகளை அறுப்போம். குடும்ப ஆட்சியின் கொள்ளைக் கூட்டத்தை வீட்டுக்கு அனுப்ப சபதம் ஏற்போம்.

அ.தி.மு.க.வை கட்டிக் காப்போம். நாடாளுமன்றத் தேர்தலுக்காக மெகா கூட்டணி அமைத்து வரலாற்று வெற்றிக்கு சூளுரைப்போம். நாற்பதும் நமதே நாளையும் நமதே என்று சபதம் ஏற்போம்.

தமிழ்நாடு தழைக்க உழைத்திடுவோம். புரட்சித் தலைவியின், புரட்சித் தலைவரின் பெரும்புகழையும் எந்நாளும் போற்றிடுவோம். கழகத்தை இமயமாய் உயர்த்திடுவோம் என்று உளமார உறுதியேற்போம் என்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

# ஜெயலலிதா நினைவு தினம்: கவர்னர் தமிழிசை அஞ்சலி



**சென்னை, டிச. 06-**

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தனது டுவிட்டர் பதிவில் அஞ்சலி செலுத்தி உள்ளார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உடல்நலக்குறைவு காரணமாக சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் 2016 ஆண்டு டிசம்பர் 5-ஆம் தேதி காலமானார். ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

இந்த நிலையில், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தையொட்டி தெலுங்கானா கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது,

பணிந்து நின்றுதான் பணி செய்ய வேண்டும் என்பதில்லை. துணிந்து நின்றும் பணி செய்யலாம் என்பதனை நிருபித்த பெண் ஆளுமை முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் இந்த நினைவு தின நாளில் அவரது நினைவை போற்றுகிறேன் என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# பார்லி., தேர்தலில் அ.தி.மு.க வெற்றி பெற களப்பணியை தொடங்குவோம்

## ஓ.பி.எஸ் தலைமையில் உறுதிமொழி ஏற்பு

**சென்னை, டிச. 06-**

வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவின் வழியில் அ.தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற கடுமையாக களப் பணியை தொடங்குவோம் என்று ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் ஜெயலலிதாவின் நினைவு நாளையொட்டி உறுதிமொழி ஏற்கப்பட்டது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் அஞ்சலி செலுத்தினார். அதை தொடர்ந்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.

அ.தி.மு.க. தலைவரை தொண்டர்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விதியை வகுத்துத் தந்தவர் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அதனை நிறைவேற்றி வர் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. அந்த விதியை சதியை துணையாகக் கொண்டு தன்னலத்திற்காக மாற்றியுள்ள சர்வாதிகாரப் போக்கினை வன்மையாகக் கண்டிப்பதோடு மீண்டும் எம்ஜிஆர், ஜெயலலிதா வகுத்த வழியில் தொண்டர்களால் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியை மீட்டெடுத்து சர்வாதிகார போக்கிற்கு முடிவு கட்டுவோம்.

தம் மக்கள் யாரிடத்திலும் எதற்காகவும் கையேந்தி நிற்காமல் இருக்க ஆயுளை அர்ப்பணித்த, மக்களால் நான் மக்களுக்காக நான் என்ற மந்திர மொழியை தன் வாழ்நாள் பிரகடனமாக ஆக்கி முன்னாள் முதல்வர் ஜெயலலிதா செலுத்திய ஆட்சியை மீண்டும் அமைக்க சபதம் ஏற்போம். அரசியல் காழ்ப்புணர்ச்சியால் ஆளும் தி.மு.க. அரசு, அ.தி.மு.க. கொண்டு வந்த திட்டங்களை ரத்து செய்திருப்பதற்கு கண்டனம் தெரிவிக்கிறோம். அதே வேளையில் ஜெயலலிதாவின் கருணை மிக்க ஆட்சியை திரும்பிக் கொண்டு வர உறுதியேற்கிறோம்.

மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்ற கொள்கையினால் பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவின் வழியில் அ.தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற கடுமையாக களப் பணியை தொடங்குவோம். ஆளுமை, மதி நுட்பம், சீரிய திட்டங்களால் அ.தி.மு.க. தொண்டர்களை ஓரணி திரட்டி ஒற்றுமை பறைசாற்றி பல வெற்றிகளை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெற்றுக் கொடுத்தார். அவ்வழியில் நாமும் பயணித்து வெற்றி பாதையில் அ.தி.மு.க.வை அழைத்துச் செல்வோம் என உறுதி ஏற்கிறோம். இவ்வாறு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

# ஜி-20 சின்னம் விவகாரம்: மம்தா பானர்ஜி எதிர்ப்பு

**புதுடெல்லி, டிச. 06-**

ஜி-20 சின்னத்தில் தாமரை மலரை பயன்படுத்த மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மேலும் ஜி-20 தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் மோடியுடன் சந்திப்பு கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜி-20 உச்சி மாநாடு இந்தோனேசியாவின் பாலி நகரில் கடந்த நவம்பர் 15 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடந்தது.

2-வது நாள் நடந்த பாலி மாநாட்டு நிறைவு விழாவில் ஜி-20 தலைமைத்துவம் இந்தியாவிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது. இதன் நிறைவு விழாவில் பேசிய பிரதமர் மோடி, ஜி-20 தலைமையை இந்தியா ஏற்று நடத்துவது என்பது ஒவ்வோர் இந்தியருக்கும் பெருமை அளிக்கும் விசயம். இந்தியாவில் வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் நகரங்களில் ஜி-20 கூட்டங்களை நாங்கள் நடத்துவோம் என்று கூறினார்.

இந்த மாநாடு தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் அதன் தலைவராக மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி கலந்து கொள்கிறார்.

இந்த நிலையில், மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜி செய்தியாளர்களிடம் நேற்று பேசும்போது, டெல்லியில் ஜி-20 தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் மோடியுடன் சந்திப்பு எதுவும் கிடையாது. இது ஜி-20 மாநாடு தொடர்பான சந்திப்பு மட்டுமே ஆகும்.

நமது தேசிய மலராக தாமரை உள்ளது என்றபோதிலும், அது அரசியல் கட்சி ஒன்றின் சின்னமும் ஆகும். அதனால், ஜி-20 மாநாட்டுக்கான சின்னம் ஆக தாமரை மலர் பயன்படுத்தப்படகூடாது. அவர்களுக்கு வேறு சில வாய்ப்புகள் உள்ளன என கூறியுள்ளார். வாக்களிக்கும் தினத்தில் ஊர்வலம் செல்ல அனுமதி கிடையாது. ஆனால், பிரதமர் மோடி மற்றும் அவரது கட்சியினர் வி.வி.ஐ.பி.க்கள். அவர்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம். அவர்களை மன்னித்து விடுவார்கள் என்று குஜராத் சட்டசபை தேர்தல் பற்றி மம்தா பானர்ஜி குறிப்பிட்டு பேசினார்.

### இந்து அறநிலையத்துறை சார்பில்

# மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோவில் யானைக்கு ரூ. 10 லட்சத்தில் நீச்சல் குளம்

**திருவாரூர், டிச. 06-**

மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோவில் யானை பாப்கட் செங்கமலத்திற்கு இந்து அறநிலையத்துறை சார்பில் ரூ.10 லட்சம் மதிப்பில் நீச்சல் குளம் கட்டப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள ராஜகோபால சுவாமி கோவிலில் செங்கமலம் யானை பராமரிக்கப்பட்டு வருகிறது. 34 வயதாகும் இந்த யானையின் சிகை அலங்காரத்தின் காரணமாக பாப்கட் செங்கமலம் என்று பக்தர்கள் அழைக்கின்றனர். இந்த யானை குளிப்பதற்காக ஏற்கனவே ரூ.75,000 செலவில் ஷவர் வசதி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த யானைக்கு கோவில் வளாகத்திலேயே நீச்சல் குளம் கட்டித்தர வேண்டும் என சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி. ராஜா கோரிக்கை வைத்திருந்தார். அதனை ஏற்று ரூ.10 லட்சம் மதிப்பில் இந்து அறநிலையத்துறை நீச்சல் குளத்தை கட்டி கொடுத்துள்ளது. இதனை சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி. ராஜா திறந்து வைத்தார். கோயில் வளாகத்தில் ஈசானி மூலையில் சுமார் ஆறரை அடி ஆழம், 500 சதுரடி பரப்பளவில் இந்த குளம் கட்டப்பட்டுள்ளது. நீச்சல் குளத்தில் செங்கமலம் யானை குளித்து மகிழ்ந்த காட்சியை கோயிலுக்கு வந்த பக்தர்கள் பார்த்து ரசித்தனர்.

### பரந்தூர் விமான நிலையம்:

# சர்வதேச டெண்டரை கோரிய தமிழக அரசு

**சென்னை, டிச. 06-**

பொதுமக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பரந்தூர் விமான நிலைய மேம்பாட்டிற்கான சர்வதேச ஒப்பந்தப்புள்ளியை தமிழக அரசு கோரியுள்ளது.

சென்னையின் இரண்டாவது விமான நிலையம் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் அமைய உள்ளது. இதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடந்து வருகின்றன. இதற்காக பரந்தூரை சுற்றி உள்ள ஏகனாபுரம், நெல்வாய், நாகப்பட்டு, எடையார்பாக்கம், தண்டலம் உள்ளிட்ட 13 கிராமங்களில் நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளது.

புதிய விமான நிலையத்துக்கு விளைநிலங்கள் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள், விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் பரந்தூர் புதிய விமான நிலையத்துக்கான பூர்வாங்க பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த நிலையில், பரந்தூர் விமான நிலைய மேம்பாட்டிற்கான சர்வதேச ஒப்பந்தப்புள்ளியை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கோரியுள்ளது.

பசுமை விமான நிலையம் - சென்னை விமான நிலையம் இடையே சாலை, ரயில் இணைப்பு போக்குவரத்து தேவைகளை ஆராய வேண்டும். விமான போக்குவரத்தின் வளர்ச்சி நிலைகளை ஆய்வு செய்ய வேண்டும், 2069-70-ம் நிதியாண்டு வரை போக்குவரத்தின் கணிப்புகள் இடம்பெற வேண்டும் எனவும் தமிழக அரசு நிபந்தனை விதித்துள்ளது.

# கனியாமூர் தனியார் பள்ளியில் நேரடி வகுப்புகள் தொடக்கம்

**கள்ளக்குறிச்சி, டிச. 06-**

கலவரத்தால் மூடப்பட்டிருந்த கனியாமூர் தனியார் பள்ளி சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி நேற்று (டிச.5) காலை திறக்கப்பட்டது. 9 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நேரடி வகுப்புகள் நடத்தப்பட்டன.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் கனியாமூரில் உள்ள தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சில மாதங்களுக்கு முன் மாணவி ஒருவர் இறப்பு தொடர்பாக போராட்டக்காரர்கள் பள்ளி மற்றும் அதன் வளாகத்தை தீக்கரையாக்கினார். இதனால் பள்ளி காலவரையின்றி மூடப்பட்டது. மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் மூலமாகவும் மற்றும் மேல்நிலை வகுப்பு மாணவர்களுக்கு வாடகை கட்டிடங்கள், வேறு பள்ளிகள் மூலமாகவும் வகுப்புகள் நடைபெற்றது.

விருப்பமுள்ள மாணவர்கள் மாற்றுச் சான்றிதழை பெற்றுக்கொண்டு மற்ற பள்ளியிலும் தங்களை இணைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கினர். இந்நிலையில் பள்ளி முழுவதும் சீரமைக்கப்பட்டு கல்வித்துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் நேரடி கள ஆய்வு செய்து அறிக்கை அனுப்பினர். நீதிமன்ற உத்தரவுப்படி நிபந்தனைகளுடன் பள்ளி திறக்க அனுமதி வழங்கப்பட்டு நேற்று முதல் நேரடி வகுப்புகள் தொடங்கப்பட்டன.

9 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு முதலில் நேரடி வகுப்புகள் தொடங்கப்பட்டு பாடங்கள் நடத்தப்பட்டன. அதற்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகம் செய்திருந்தது. இதற்கிடையே பள்ளி மீண்டும் செயல்பட துவங்கியதை அடுத்து அங்கு போலீஸார் நேற்று முதல் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# உயர் நீதிமன்ற மதுரை கிளையில் முதல் பெண் சோப்தார் நியமனம்



**மதுரை, டிச. 06-**

ஐகோர்ட்டு மதுரை கிளையில் முதல் பெண் சோப்தாராக லலிதா என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஐகோர்ட்டு மதுரை கிளையில் சோப்தார் பணியில் முதல் முறையாக பெண் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். நீதிபதியுடன் செங்கோல் ஏந்தி செல்லும் சோப்தார் பணியில் மதுரை ஐகோர்ட்டை பொறுத்தவரை ஆண்கள் மட்டுமே இருந்து வந்தனர். அவர்கள் சீருடையாக வெள்ளை நிற ஆடையும், சிவப்பு நிற தலைப்பாகையும் அணிந்து இருப்பார்கள். தற்போது முதல் முறையாக ஐகோர்ட்டு மதுரை கிளையில் சோப்தார் பணியில் லலிதா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

### மலை உச்சிக்கு கொண்டு செல்லப்பட்ட கொப்பரை:

# திருவண்ணாமலையில் இன்று மகா தீபம் ஏற்றம்

**தி.மலை, டிச. 06-**

கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் இன்று மகா தீபம் ஏற்றப்படுகிறது. இதனையொட்டி ஐந்தரை அடி உயரம் கொண்ட செப்பு கொப்பரை மலை மீது எடுத்து செல்லப்பட்டது.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் மகாதீப திருவிழா கடந்த நவம்பர் 27-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனை தொடர்ந்து 10 நாள் காலை இரவு என இரு வேளைகளிலும் பஞ்சபூர்த்திகள் மாடவீதி உலா வருகின்றனர். விழாவில் 7-ம் நாளான கடந்த 3-ம் தேதி பஞ்ச மூர்த்திகள் மகா தேரோட்டம் நடைபெற்றது. கார்த்திகை தீப விழாவின் உச்ச நிகழ்வாக இன்று செவ்வாய்கிழமை அதிகாலை 4 மணி அளவில் கோவில் சாமி சன்னதி அருகில் பரணி தீபமும், மாலை 6 மணிக்கு 2,668 அடி உயரம் கொண்ட மலை மீது மகா தீபமும் ஏற்றப்படுகிறது.

இதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ஐந்தரை அடி உயரம் கொண்ட செப்பு கொப்பரை தயார் செய்யப்பட்டு நேற்று அதிகாலை அண்ணாமலையார் கோவிலில் சிறப்பு பூஜை செய்யப்பட்டு மலை மீது எடுத்து செல்லப்பட்டது. இதற்காக 4500 கிலோ நெய் மற்றும் 1500 மீட்டர் காடா துணி தயார் நிலையில் வைக்கப்பட்டு அதனையும் மலைக்கு கொண்டு சென்றனர். தீபம் ஏற்றப்படுவதை முன்னிட்டு அதிகாலையிலேயே கோவில் நடை திறக்கப்பட்டு பஞ்சமூர்த்திகளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெறும். அதிகாலை 4 மணிக்கு சாமி சன்னதியில் உள்ள அர்த்த மண்டபத்தில் பரணிதீபம் ஏற்றப்படும். இதையடுத்து பிரம்ம தீர்த்தத்தில் சுப்ரமணியர் சுவாமி தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெறும். மாலையில் பஞ்சமூர்த்திகள், சாமி சன்னதி முன்பாக எழுந்தருள்வார்கள்.

அதைத் தொடர்ந்து 6 மணிக்கு ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர், சாமி சன்னதியில் இருந்து ஆடியபடியே கொடிமரம் வந்து பக்தர்களுக்கு காட்சி தருவார். அர்த்தநாரீஸ்வரர் காட்சி தந்ததும் சரியாக மாலை 6 மணிக்கு சாமி சன்னதி முன்பு அகண்ட தீபம் ஏற்றப்படும். அதே நேரத்தில் மலைஉச்சியில் மகாதீபம் ஏற்றப்படும்.

அப்போது கோவிலில் கூடியிருக்கும் பக்தர்கள் அண்ணாமலையாருக்கு அரோகரா என்ற பக்தி கோஷத்துடன் சாமி தரிசனம் செய்வார்கள். மகாதீபத்தை முன்னிட்டு காலை முதலே பக்தர்கள் கிரிவலம் செல்வார்கள். மகா தீபம் ஏற்றியதும் கிரிவலப்பாதையில் இருக்கும் பக்தர்கள் மலையை நோக்கி மகாதீபத்தை வணங்குவார்கள்.

கார்த்திகை தீப திருவிழாவில் பல்வேறு மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் சுமார் 35 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தமிழகம் உட்பட 4 மாநில கவர்னர்கள் மற்றும் ஐகோர்ட்டு நீதிபதிகள் வருகை தர உள்ளனர். இதனால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 12 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# மக்களவை தேர்தலில் எதிரிகளை வெல்வோம்: சசிகலா உறுதிமொழி


**சென்னை, டிச. 06-**

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய சசிகலா, எதிரிகளை வென்று வீறுநடை போட நாம் ஒன்றாக வேண்டும் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் சசிகலா அஞ்சலி செலுத்தினார். இதனைத் தொடர்ந்து தனது ஆதரவாளர்களுடன் உறுதிமொழி ஏற்றார். அதில், ஜெயலலிதாவின் நினைவு நாளில் தமிழக மக்களின் நலனுக்காகவும், நமது இயக்கத்தின் வளர்ச்சிக்காவும், தொண்டர்களின் உயர்வுக்காவும் ஒன்றிணைவோம். தமிழகத்தில் ஜெயலலிதா ஆற்றிய அரும்பணிகளை என்நாளும் நினைவில் கொண்டு கடமை உணர்வோடு, பணியாற்ற உளமார உறுதி ஏற்போம். நமது தலைவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து பயணித்திட உறுதி ஏற்போம்.


ஒற்றுமையோடு இணைந்து வரும் பாராளுமன்ற தேர்தலில் எதிரிகளை வென்று வீறுநடை போட நாம் ஒன்றாக வேண்டும் என்று சசிகலா உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க...




தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்ட சீரமைப்பு என்ற பெயரில் சுமார் 28,000 சத்துணவு மையங்களை மூடுவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் சத்துணவு மையங்களை மூடுவதோ அல்லது ஒருங்கிணைப்பதோ சத்துணவுத் திட்டத்தை வலுவிழக்கவே செய்யும்.

**- அன்புமணி**




ராகுலின் ஒற்றுமை யாத்திரைக்கு சமூக வலைதளங்களிலும் ஆதரவு இருக்கிறது. ஆனால் பிரதான ஊடகங்கள் இந்த செய்திகளைப் புறக்கணிக்கின்றன. ராகுல் தன் நேர்மறை சிந்தனைகளைப் பகிர்ந்து வருகிறார். இதனை நீங்கள் ஏன் புறக்கணிக்கிறீர்கள்? இந்திய தேசம் உங்களை மன்னிக்காது.

**- அசோக் கெலாட்**



ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்யும் மசோதாவுக்கு ஒப்புதல் வழங்காமல், அதனால் நேரிடும் உயிர் பலிகளுக்கு கவர்னர் உடன்படுகிறார். இதுகுறித்து தமிழக சட்டத் துறை அமைச்சர், நேரில் கவர்னரை சந்தித்து விளக்கம் அளித்தும் மசோதாவுக்கு ஒப்புதல் வழங்காமல் இருப்பதற்கு கண்டனத்துக்குரியது.

**- கே.பாலகிருஷ்ணன்**



தமிழ்நாட்டில் நான் மட்டும் தான் திமுகவுக்கு எதிர்க்கட்சி போல் தெரிகிறது. தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் உறுமினால் பயந்து, பதுங்கும் பூனையாக பாஜக உள்ளது. மேலும், சினிமா கலாசாரம் தமிழக பாஜகவை அழித்துவிட்டது.

**- சுப்பிரமணியன் சுவாமி**



மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மாவின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் திண்டுக்கல் பேருந்து நிலையம் அருகே உள்ள புரட்சித்தலைவர் எம்ஜிஆர் திருவுருவ சிலை முன்புறம் அமைக்கப்பட்டிருந்த அம்மாவின் திருவுருவ படத்திற்கு கழக அமைப்பு செயலாளர் வி.மருதராஜ் தலைமையிலும் மாநில கழக அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என். கண்ணன், முன்னிலையிலும் கழக நிர்வாகிகள் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினர். உடன் அபிராமி கூட்டுறவு பண்டகசாலை தலைவர் பாரதி முருகன், ஒன்றிய கழக செயலாளர்கள் இராஜசேகரன், முருகன் பகுதி செயலாளர்கள் மோகன், சுப்பிரமணி, சேசு, முரளி மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன், கிழக்கு மாவட்ட தொழிற்சங்க செயலாளர் முத்தையா, அண்ணா போக்குவரத்து சங்க முன்னாள் திட்ட செயலாளர் நாராயணசாமி, முன்னாள் அரசு வழக்கறிஞர் பழனிச்சாமி, முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெப்போலியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மறைந்த தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மாவின் 6ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் புரட்சித்தலைவி அம்மாவின் திருவுருவ சிலைக்கு படத்திற்கு மாநில கழக அம்மா பேரவை இணை செயலாளர் ஆர்.வி.என். கண்ணன், ஒன்றிய கழக செயலாளர் முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# அலங்காநல்லூரில் அழகர்மலையான் கோவில் கும்பாபிஷேக விழா

**அலங்காநல்லூர், டிச. 06-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ அழகர்மலையான், அழகாட்சியம்மாள், வெங்கட்டம்மாள், முனியாண்டி சுவாமி ஆகிய தெய்வங்களின் குல தெய்வக்கோவில் இல்ல கும்பாபிஷேகம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நடந்த இந்த யாகசாலை பூஜையில் கணபதி ஹோமம், புண்ணியாசனம், பல்வேறு ஹோமங்கள் நடைபெற்றது. தொடர்ந்து இரண்டு கால யாக பூஜையுடன் மேளதாளங்கள் முழங்க கடம் புறப்பாடாகி கோபுரத்தின் உச்சியில் உள்ள கலசத்தில் பட்டர்களின் வேத மந்திரங்கள் முழங்க புனித நீரை ஊற்றி மகா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.



தொடர்ந்து சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. திருக்கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை நாட்டாமை வகையறா குடும்பத்தார்கள் செய்திருந்தனர்.

# திருமங்கலத்தில் பயங்கர ஆயுதங்களுடன் கஞ்சா வைத்திருந்த வாலிபர்கள் 3 பேர் கைது

**திருமங்கலம், டிச. 06-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பகுதியில் திருமங்கலம் டவுன் போலீசார் ரோந்து சென்ற போது கஞ்சா மற்றும் பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்த வாலிபர்கள் 3 பேரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருமங்கலம் அண்ணா நகர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கஞ்சா அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக திருமங்கலம் டவுன் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து மாறுவேடத்தில் அப்பகுதியில் டவுன் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது பள்ளி அருகே சந்தேகத்திற்கு இடமான வகையில் அங்கு சுற்றித் திரிந்து கொண்டிருந்த மதுரை சம்பட்டிபுரத்தை சேர்ந்த ஆதீஸ்வரன்(25), பெரிய மறவன்குளத்தை சேர்ந்த ரகுராம்(22),திருமங்கலம் நகரை சேர்ந்த கருப்பையா(39) ஆகிய 3 பேரை பிடித்து போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.அப்போது மூன்று பேரிடம் 400 கிராம் கஞ்சா, ஒரு வாள், இரண்டு கத்தி ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து மூன்று பேரையும் கைது செய்த திருமங்கலம் டவுன் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-வது ஆண்டு நினைவு தினம்:

# டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க.வினர் மலரஞ்சலி



**திருமங்கலம், டிச. 06-**

மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முன்னாள் அமைச்சரும்,கழக அம்மா பேரவைச் செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளருமான ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ., வழிகாட்டுதலின்படி டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் உள்ள முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வெண்கல திருவுருவச் சிலைக்கு ராஜ்யசபா எம்.பி.,சந்திரசேகரன் தலைமையில் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க நிர்வாகிகளும் தொண்டர்களும் மாலைகள் அணிவித்தும் மலர்களை தூவியும் அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் நேற்று தமிழகம் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளில் அனுசரிக்கப்பட்டது.இதையொட்டி முன்னாள் அமைச்சர்,கழக அம்மா பேரவைச் செயலாளர்,மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் ஆர்.பி.உதயகுமார் எம்.எல்.ஏ.,வழிகாட்டுதலின்படி மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் டி.குன்னத்தூரிலுள்ள அம்மா கோவிலில் உள்ள மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வெண்கல திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்திடும் நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்றது.

அதன்படி டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் உள்ள மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் திருவுருவச் சிலைக்கு ராஜ்யசபா எம்.பி.,சந்திரசேகரன் தலைமையில் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அ.தி.மு.க நிர்வாகிகள் மற்றும் திரளான தொண்டர்கள் ஊர்வலமாக வந்து மாலைகள் அணிவித்தும் மலர்களை தூவியும் அஞ்சலி செலுத்தினார்கள். மேலும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பெண்களும் பொதுமக்களும் அம்மாவின் திருவுருவச் சிலையின் மீது மலர்களை தூவி வணங்கிச் சென்றனர்.

இதே போன்று மதுரை புறநகர் மேற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அம்மாவின் திருவுருவப் படத்திற்கு மாலையணிவித்து கட்சியினரும்,பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்த அஞ்சலி செலுத்திடும் நிகழ்வினில் மாவட்ட கழக துணைச் செயலாளர் வக்கீல் தமிழ்ச்செல்வம்,பொருளாளர் வக்கீல் திருப்பதி, முன்னாள் எம்.எல்.ஏ.,நீதிபதி, மாநில சார்புஅணி நிர்வாகிகள் ராமகிருஷ்ணன்,தனராஜன், பெற்றிவேல், ஒன்றிய கழகச் செயலாளர்கள் திருமங்கலம் வக்கீல்.அன்பழகன்,உலகாணி எம்.கே.மகாலிங்கம்,ராமசாமி, பிச்சைராஜன்,ராஜா,ரவிச்சந்திரன்,திருமங்கலம் நகர் கழகச் செயலாளர் ஜே.டி.விஜயன், திருமங்கலம் யூனியன் சேர்மன் லதா ஜெகன்,சார்புஅணி மாவட்டச் செயலாளர்கள் தமிழழகன், ராமகிருஷ்ணன், சிங்கராஜ்பாண்டியன்,லெட்சுமி,சதீஸ் சண்முகம், மகேந்திர பாண்டி, பால்பாண்டி, பொதுக்குழு உறுப்பினர் சுமதிசாமிநாதன்,ஒன்றிய பொருளாளர் உரப்பனூர் சாமிநாதன், கட்சி நிர்வாகிகள் ஆலம்பட்டி ஜெகன்,ஆண்டிச்சாமி, ஒன்றிய கவுன்சிலர்கள் மின்னல்கொடி ஆண்டிச்சாமி, உச்சப்பட்டி செல்வம்,ஆதி(எ) ராஜா,கட்சி நிர்வாகிகள் வக்கீல் சி.முருகன்,நெடுமாறன், பாலசுப்பிரமணியன்,வேப்பங்குளம் கண்ணன்,பேரவை பாண்டி,அன்னக்கொடி,கண்ணன்,நேதாஜி,காசி,ஆனந்த், பாலகுமார் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மேலூர் நகர் கழகத்தின் சார்பாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினம்



**மேலூர், டிச. 06-**

முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் நகர் அதிமுக சார்பாக 300க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக சென்று மேலூர் பஸ் நிலையம் அருகே அமைக்கப்பட்டிருந்த புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொருளாளர் அம்பலம், மேலூர் நகர் அம்மா பேரவை செயலாளர் சாகுல் ஹமீது, மேலூர் நகர் கழக துணை செயலாளர் சரவணக்குமார், தகவல் தொழில்நுட்ப மண்டல துணைத் தலைவர் கௌரி சங்கர்,

மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் கச்சிராயன்பட்டி மாணிக்கம், துணைச் செயலாளர் பாண்டி லட்சுமி, நகர் இணைச் செயலாளர் ரேணுகா தேவி, நகர் அவைத்தலைவர் பூச்செண்டு, நகர் மாவட்ட பிரதிநிதி திருப்பதி, அறிவழகன், முன்னாள் நகர்கழகச் செயலாளர் நாகசுப்பிரமணியன், முன்னாள் நகர் மாவட்ட பிரதிநிதி தவப்பாண்டி, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் ராமலிங்கம், கண்ணன், தம்பிதுரை, பாலகிருஷ்ணன், நகர் மகளிர் அணி செயலாளர் விஜயா அர்ஜுனன், நகர் இலக்கிய அணி செயலாளர் மோகன சுந்தரம், நகர் ஐடி விங் செயலாளர் பிரபாகரன் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி வட்டார வள மையத்தின் சார்பில் வட்டார அளவிலான கலைத்திருவிழா



**பரமக்குடி, டிச. 06-**

ஒருங்கிணைந்த பள்ளி கல்வி ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டார வள மையத்தின் சார்பில் சௌராஷ்டிரா மேல்நிலைப் பள்ளியில் வட்டார அளவில் கலைத்திருவிழா நடைபெற்றது. நவம்பர் 29ஆம் தேதி முதல் துவங்கி டிசம்பர் 1-ம் தேதி வரை நடைபெற்றது.இவ்விழாவிற்கு ராமநாதபுரம் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலு முத்து தலைமை தாங்கினார்.பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் மன்ற துணைத் தலைவர் குணா, மாவட்ட கல்வி அலுவலர் முருகம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தார். சௌராஷ்ட்ரா மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் நாகராஜன் அனைவரையும் வரவேற்றார்.வட்டார அளவிலான கலைத் திருவிழாவுக்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்:- பள்ளி மாணவ மாணவிகளின் கலைத் விழாவில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.அழிந்து வரும் பல்வேறு கலை வடிவங்களை மீட்டெடுக்கும் வகையில் மிகச் சிறப்பாக போட்டிகள் நடைபெற்றது.இன்றைய காலகட்டத்தில் கலைத் திருவிழா போட்டிகள் மூலம் மாணவ, மாணவிகளின் பல்வேறு திறமைகளை காணமுடிகிறது.இப் போட்டிகளின் மூலம் மாணவர்களின் மத்தியில் புதிய எழுச்சியும்,பெற்றோர்கள் ஆசிரியர்கள் மத்தியில் மகிழ்ச்சியும் ஏற்படுத்தும் வண்ணம் இக்கலைத் திருவிழா அமைந்துள்ளது.இக்கலைத் திருவிழாவில் கலந்து கொண்டும், வெற்றியும் பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். இந்நிகழ்ச்சியில் வட்டார கல்வி அலுவலர்கள் ரவிக்குமார், சுதாமதி,சௌராஷ்டிரா மேல்நிலைப் பள்ளி கல்வி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.இக்கலைத் திருவிழா ஏற்பாட்டினை வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் சிறப்பாக செய்தனர்.



மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் கட்சி அலுவலகத்தில் மற்றும் கே.கே.ஆர்ச் அருகே உள்ள ஜெயலலிதாவின் உருவசிலைக்கு மாவட்ட துணைசெயலாளர் வில்லாபுரம் ஜெ.ராஜா தலைமையில் அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் ஜெயந்திராஜூ மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பகுதி, வட்ட, சார்பு அணிநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வத்தலகுண்டு கன்னிமார் கோவில் தெருவில் ஜெயலலிதாவின் 6-வது ஆண்டு நினைவு தினம்



**வத்தலகுண்டு, டிச. 06-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு மேற்குபகுதி ஒன்றியத்தைச் சேர்ந்த காந்தி நகர் தெற்கு பகுதி கன்னிமார் கோவில் தெருவில் உள்ள எம்ஜிஆர் திடலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆறாவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் முழு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அதிமுக ஐடி தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய செயலாளர் மனோஜ்குமார் தலைமையில். வத்தலகுண்டு மேற்குப்பகுதி ஒன்றிய செயலாளர்

எம் வி எம் பாண்டியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மீனவர் அணி பொருளாளர் முருகேசன். வத்தலகுண்டு கூட்டுறவு அர்பன் வங்கி முன்னாள் தலைவர் ஜெயப்பிரகாஷ் உள்பட அதிமுக நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

**பட்டிவீரன்பட்டி.**

பட்டிவீரன்பட்டி சாவடி பஜாரில் அமைந்துள்ள எம்ஜிஆர் திடலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் முழு உருவப்படத்திற்கு மலர் மாலை அறிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பட்டிவீரன்பட்டி நகரச் செயலாளர் ராஜசேகரன் தலைமை வைத்தார். அம்மா பேரவை நகர செயலாளர் விசு அனைவரையும் வரவேற்றார் வத்தலக்குண்டு மேற்கு பகுதி ஒன்றிய செயலாளர் எம் வி எம் பாண்டியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பட்டிவீரன்பட்டியில் உள்ள அதிமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டார்கள்.

# நத்தம் அரசு பள்ளியில் வட்டார அளவில் கலைத்திருவிழா



**நத்தம், டிச. 06-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் துரைக்கமலம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வட்டார அளவிலான 2022-2023-ம் ஆண்டிற்குரிய கலைத்திருவிழா போட்டிகள் நடந்தது. இதற்கு பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர்பாட்சா தலைமை தாங்கினார்.தலைமையாசிரியர்கள் திருநாவுக்கரசு, ஜேசுதாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கரகாட்டம்,ஒயிலாட்டம், சுவாமி ஆட்டம் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடந்தது. விழாவில் வட்டார கல்வி அலுவலர்கள் சுதா, ஆனந்தவேல், கற்பகம் உள்ளிட்ட அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். 5 நாட்கள் நடந்த கலைத் திருவிழாவில் வட்டார அளவில் அரசு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி உள்பட 38 பள்ளிகள் கலந்துகொண்டன. வட்டார வளமைய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுளாதேவி நன்றி கூறினார்.



மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை கே.கே.நகர் ஆர்ச் அருகே ஜெயலலிதாவின் உருவசிலைக்கு மாநகர் மாவட்ட அ.தி.மு.க.ஓ.பி.எஸ்.அணி மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.பி.யுமான ஆர். கோபாலகிருஷ்ணன் தலைமையில் அய்யப்பன் எம்எல்.ஏ., கே.முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பெருந்திரளானோர் ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் நிர்வாகிகள் வி.கே.எஸ்.மாரிச்சாமி, புதூர் முனியசாமி, ஏ.கே. முத்திருளாண்டி, கிருஷ்ணமூர்த்தி, மிசாசெந்தில், விளாங்குடி சி.போஸ், கருப்பணன், கீழமாத்தூர் தங்கராஜ், கருப்பு சரவணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு நாள்: தர்மபுரி மாவட்டம் முழுவதும் அ.தி.மு.க. சார்பில் அனுசரிப்பு



தர்மபுரி,டிச.06-
தர்மபுரி மாவட்ட அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் ஜெயலலிதா நினைவு நாளையொட்டி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளரும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான எஸ்.ஆர். வெற்றிவேல் தலைமை தாங்கினார். நகர செயலாளர் பூக்கடை ரவி, மாவட்ட அவைத் தலைவர் நாகராஜன், மாவட்ட துணை செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் நல்ல தம்பி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் ஜெயலலிதா எம்.ஜி.ஆர். ஆகியோரது உருவ சிலைகளுக்கு கட்சி நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். பின்னர் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த ஜெயலலிதா உருவப் படத்திற்கு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.
இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சிவப்பிரகாசம், பழனி, சார்பு அமைப்பு மாவட்ட செயலாளர்கள் பழனிசாமி, கோவிந்தசாமி, அண்ணா பணியாளர் சங்க மாநில நிர்வாகி சின் அருள்சாமி, நகர அவைத் தலைவர் அம்மாவடிவேல், நகர துணை செயலாளர் அறிவாளி, நகர இணை செயலாளர் சுரேஷ், கூட்டுறவு சங்க தலைவர் அங்குராஜ், நகராட்சி கவுன்சிலர்கள் செந்தில்வேல், சக்திவேல், மாதேஷ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஜெயலலிதாவின்6ஆம்ஆண்டுநினைவுதினத்தைமுன்னிட்டுராசிபுரம்சட்டமன்றதொகுதி, ஆர்.பட்டணம் பேரூர் கழகத்தின் சார்பில் ம் பேரூர் செயலாளர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். ஒன்றிய செயலாளர் வேம்பு சேகரன், ஒன்றிய துணைச் செயலாளர் சின்னப்பையன் (எ) முத்துசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஜெயலலிதாவின் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ராசிபுரம் நகரக் அதிமுக சார்பில் பழைய பஸ் நிலையம் அருகே அவரது திருவுருவப் படத்திற்கு நகரசெயலாளர் எம்.பாலசுப்ரமணியம் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.



ஜெயலலிதாவின் 6ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டசிங்களாந்தபுரத்தில்அவரதுதிருவுருவப்படத்திற்குஒன்றியபொருளாளர் பி.மகேஸ்வரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட இணைச் செயலாளர் அ.விஷ்வா, கூட்டுறவு வங்கி தலைவர் கே.கணபதி, ஊராட்சி துணைத் தலைவர் எஸ்.சுரேஷ்குமார், சேகர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி தலைமையில் நடைபெற்றது



கிருஷ்ணகிரி,டிச.06-
மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, சாலை வசதி, மின் இணைப்;பு, மற்றும் பல்வேறு கோரிக்கைகள் உள்ளிட்ட 298 மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்;கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.
இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) நிலஎடுப்பு‰(சிப்காட்) வ.பவனந்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ஐய்யப்பன், மாவட்ட வழங்கல் அலுவலர் பி.சுகுமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தர்மபுரியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் ஆலோசனைக் கூட்டம்



தர்மபுரி,டிச.06-
தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தர்மபுரி மாவட்ட செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் தர்மபுரி அண்ணா நகரில் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ரிஸ்வான் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் இஸ்மாயில் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநிலச் செயலாளர் யாசிர் கலந்து கொண்டு தீர்மானங்கள் குறித்து விளக்கி பேசினார். இஸ்லாமிய சமுதாயத்தை குறி வைத்து பொது சிவில் சட்டத்தை கொண்டு வரக்கூடாது. தமிழகத்தில் இஸ்லாமியர்களுக்கு 7 சதவீத இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும். தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் இஸ்லாமியர்கள் பெற்றுள்ள இடம் என்ன என்பதை அறியும் வகையில் தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இதில் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினர். முடிவில் மாவட்ட பொருளாளர் சுலைமான் நன்றி கூறினார்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா



தர்மபுரி,டிச.06-
தர்மபுரி 13வது வார்டு குமாரசாமிப்பேட்டை திருவள்ளுவர் அறிவகம் நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளியில், திமுக இளைஞரணி தலைவரும் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.
இவ்விழாவில் திமுக நகர செயலாளர் நாட்டான் மாது தலைமையேற்று, மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி, அவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள் மற்றும் பேனாக்கள் வழங்கினார்.
இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவரும் விவசாயிகள் அணி அமைப்பாளருமான D.A.ரவி முன்னிலை வகிக்க,தர்மபுரி நகர மன்ற உறுப்பினர் ஜெகன், முன்னாள் நகர செயலாளர் அன்பழகன், நகர துணை செயலாளர் முல்லைவேந்தன், பிஎஸ்பி அசோக், அருண், வாசுதேவன் அவைத்தலைவர் அழகுவேல், நகர நிர்வாகிகள் மாதேஸ்வரன், ரஜினி ரவி, காசிநாதன், வெல்டிங் ராஜா, கனகராஜ், குமார், பிரசாந்த், பெருமாள், ரஹீம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தர்மபுரி 26வது வார்டு அதிமுக சார்பில் ஜெயலலிதா நினைவு நாள் அனுசரிப்பு



தர்மபுரி,டிச.06-
மறைந்த முதலமைச்சரும், அஇஅதிமுகவின் செயலாளருமான புரட்சித்தலைவி ஜெயலலிதா அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது. இதை முன்னிட்டு தர்மபுரி 26வது வார்டு அதிமுக சார்பில் அவரது திருஉருவ படத்திற்கு மாலையிட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.
அதிமுக நகர செயலாளர் பூக்கடை ரவி தலைமையிலும், அம்மா பேரவை மாவட்ட செயலாளர் வெற்றிவேல் முன்னிலையிலும் நடந்த இந்நிகழ்ச்சியில் சுரேஷ், நகர மன்ற உறுப்பினர்கள் ராஜாத்தி ரவி, தனலட்சுமி சுரேஷ், மாதேஷ், சத்யா கார்த்திக், செந்தில்வேலன், உமயாம்பிகை நாகேந்திரன், அலமேலு சக்திவேலு, தண்டபாணி, முன்னா, நாகராஜ், அம்பிகா மாதையன், பழனியம்மாள் ராஜா, நகர துணை செயலாளர் மலர்விழி, அறிவாளி 27வது வார்டு செயலாளர் மாதேஷ், செந்தில், கார்த்திக் மற்றும் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# கிருஷ்ணகிரி அருகே புளியம்பட்டி அரசுப் பள்ளி மாணவி சாதனை

## ஊராட்சி மன்ற தலைவர் பாராட்டு



கிருஷ்ணகிரி,டிச.06-
கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வட்டம் புளியம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி 11-ஆம் வகுப்பு மாணவி ரூபிகா மாநில அளவில் நடந்த தமிழ் மொழி இலக்கிய திறனறி தேர்வில் (டிடிஎஸ்இ-2022) தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளார்.
சாதனை படைத்த மாணவிக்கு மாதம் ரூ,1500 வீதம் இரண்டு வருடங்களுக்கு (ரூ.36000) கல்வி ஊக்கத் தொகையாக தமிழக அரசு வழங்கப்படுகிறது. மாணவி ரூபிகாவை புளியம்பட்டி ஊராட்சி மன்ற தலைவரும் தொழிலதிபருமான எஸ்.ஆர்.ரங்கநாதன் மற்றும் பள்ளியின் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர், துணைத் தலைவர்,எஸ்.எம்.சி. குழு, பெற்றோர்கள், புளியம்பட்டி ஊர் பொதுமக்கள் அனைவரும் பாராட்டினார்.

# கைலாஷ் மான் சரோவர் பள்ளியில் ஓவிய போட்டி பரிசளிப்பு விழா




சேலம்,டிச.06-
சேலம் உடையாபட்டி பைபாஸ் ஹவுஸ் அருகில் உள்ள கைலாஷ் மான் சரோவர் பள்ளியில் ஓவிய போட்டி நடைபெற்றது. இப்போட்டியை ஏவி ஆர் ஸ்வர்ண மஹால் நிறுவனம், டைட்டன் ஒல்டு நிறுவனம், சோரியல் மீடியா பார்ட்னர் மற்றும் சேலம் ஏவி எஸ், சக்தி கைலாஷ் கல்விக் குழுமம் இணைந்து ஓவிய போட்டியை நடத்தினார்கள்.
இதில் ப்ரீ கேஜி முதல் 12ம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளுக்கு ஓவியம் வரைதல் ,வண்ணம் தீட்டுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும் பள்ளி மாணவ மாணவிகள் கலை நயத்துடன் கூடிய கலை கண்காட்சியும் இடம்பெற்றது. இங்கு வருகை தந்த பெற்றோர்களும் மாணவர்களும் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்த கண்காட்சியை கண்டு பாராட்டினர். பெற்றோர்களை குதுகுலப் படுத்த கூடிய விளையாட்டுகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவ்விழாவில் சேலம் ஏவிஎஸ் மற்றும் சக்தி கைலாஷ் கல்வி குழுமங்களின் தலைவர் கைலாசம், செயலாளர் ராஜ விநாயகம், தாளாளர் செந்தில்குமார், பள்ளியின் முதல்வர் வேங்கட அழகிரி மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



சேலம் மாவட்டம் சுகவனேஸ்வரர் கோவிலில் இந்து சமய அறிநிலையத்துறை சார்பில் நடந்த திருமண விழாவில் கூடுதல் கலெக்டர் சீ.பாலச்சந்தர், மேயர் ராமச்சந்திரன், ராஜேந்திரன் எம்எல்ஏ, ஆகியோர் மணமக்களுக்கு சீர்வரிசைகளை வழங்கி வாழ்த்தினர். உடன் துணை மேயர் சாரதா தேவி, அறநிலையத்துறை இணை ஆணையர் மங்கையர்கரசி ஆகியோர் உள்ளனர்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கி.சாந்தி தலைமையில் நடைபெற்றது

தருமபுரி,டிச.06-
தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் கி.சாந்தி, தலைமையில் (05.12.2022) நடைபெற்றது. பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது:
தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைகளில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் மனுக்கள் பெறப்பட்டு, அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தீர்வு காணப்பட்டு வருகிறது.
அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து சாலை வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், பட்டா வேண்டுதல், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ், வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் ஓய்வூதியத் தொகை உள்ளிட்ட இதர உதவித் தொகைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவித் தொகைகள், உதவி உபகரணங்கள் வேண்டியும் மொத்தம் 560 மனுக்கள் வரப்பெற்றன.அவ்வாறு பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உரிய தீர்வினை உடனுக்குடன் வழங்கிட வேண்டுமெனவும், பொதுமக்கள் அளிக்கின்ற கோரிக்கை மனுக்கள் மீது துறை அலுவலர்கள் அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு உடனடி தீர்வு காண வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் கி. சாந்தி தெரிவித்தார்கள்.
இக் கூட் டத் தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.அனிதா, தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) வி.கே.சாந்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் வி. இராஜசேகரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கவிதா, பழங்குடியினர் நல மாவட்ட திட்ட அலுவலர் யு.ரமேஷ்குமார் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**காணவில்லை**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகரம், சுவாமி சிவானந்தா சாலை, கதவு எண்.7/7E–ல் குடியிருக்கும் N.மாணிக்கம் மனைவி M.வசந்தா ஆகிய நான் தெரிவிப்பது யாதெனில், இராசிபுரம் சப்ரெஜிஸ்டர் அலுவலகத்தில் என்னால் வாங்கப்பட்ட சொத்து பத்திரம் எண்.1855 நாள். 27.10.1993 கொண்டது. கடந்த 20.11.2022 அன்று மேற்கண்ட அசல் பத்திரம் இராசிபுரம் பழைய பஸ் நிலைய ஜெராக்ஸ் கடையில் நகல் எடுத்து திரும்பும்போது ஒரிஜினல் பத்திரம் தவறவிட்டுவிட்டேன். அதனை யாராவது பார்த்தால் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.
இப்படிக்கு,
M.வசந்தா,
செல்- 9952272005, 98428734187

**நகை ஏல அறிவிப்பு**

நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையம் தாலுகா 9-A, புதுபள்ளி பாளையம் ரோடு, வேலாங்காட்டார் காம்ப்ளக்ஸில் இருக்கும் சண்முகா கார்ப்பரேஷன் (லைசன்ஸ் எண் 1/2015-16) நகை அடகு கடையில் 1.11.2019முதல் 31.8.2020 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம் வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என்.முருகப்பன் அவர்களால் 30.12.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணி முதல் ப.கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் முன்னிலையில் வைத்து பொது ஏலம் விடப்படும்.
இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

**நகை ஏல அறிவிப்பு**

நாமக்கல் மாவட்டம் ப.கொமாரபாளையம் தாலுகா 9-A, புதுபள்ளி பாளையம் ரோடு, வேலாங்காட்டார் காம்ப்ளக்ஸில், இருக்கும் சண்முகா பைனான்ஸ் (லைசன்ஸ் எண்.3/2007-08), நகை அடகு கடையில் 1.11.2019முதல் 31.8.2020 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம் வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என்.முருகப்பன் அவர்களால் 30.12.2022 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11 மணி முதல் ப.கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் முன்னிலையில் வைத்து பொது ஏலம் விடப்படும்.
இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

**நகை ஏல அறிவிப்பு**

நாமக்கல் மாவட்டம் ப.கொமாரபாளையம் தாலுகா, எண் 9ஏ, புதுப்பள்ளிபாளையம் ரோடு, வேலாங்காட்டார் காம்ப்ளக்ஸில் இருக்கும் சண்முகா பைனான்ஸ், (லைசன்ஸ் எண் 05-2004-05) நகை அடகு கடையில் 1.11.2019முதல் 31.8.2020 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம்,வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என். முருகப்பன் அவர்களால் 30.12.2022 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் ப. கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி இடத்திலேயே வைத்து பொது ஏலம் விடப்படும்.
இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

**நகை ஏல அறிவிப்பு**

நாமக்கல் மாவட்டம் ப. கொமாரபாளையம் தாலுகா, 9-A, புதுபள்ளிபாளையம் ரோடு வேலங்காட்டார் காம்ப்ளக்ஸில் இருக்கும் அழகர் பைனான்ஸ் (லைசன்ஸ் எண் 4/2006-07) நகை அடகு கடையில் 1.11.2019முதல் 31.8.2020 வரை அடகு வைத்து மீட்கப்படாத காலங்கடந்த தங்கம் வெள்ளி நகைகளை திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவின் படி திருச்செங்கோடு கோட்ட ஏலதாரர் என். முருகப்பன் அவர்களால் 30.12.2022 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் ப.கொமாரபாளையம் தாலுகா மண்டல துணை வட்டாட்சியர் முன்னிலையில் வைத்து பொது ஏலம் விடப்படும்.
இப்படிக்கு
ஏலதாரர் என்.முருகப்பன்
திண்டுக்கல்

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

நீலகிரி மாவட்டத்தில்

# மாற்றுத்திறனாளி மாணவ,மாணவிகளின் சைகை மொழியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் நிகழ்ச்சி

## கலெக்டர் சா.ப.அம்ரித் துவக்கி வைத்தார்



ஊட்டி,டிச.06-

நீலகிரி மாவட்டம், உதகை செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர் நிலைப்பள்ளியில், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளின் சைகை மொழியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் நிகழ்ச்சியினை, கலெக்டர் சா.ப.அம்ரித் துவக்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில், தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பில் சிறப்பு குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்பு அளிக்கும் விதமாக ஒருங்கிணைந்த கல்வி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு கல்வி வழங்குவது அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒருங்கிணைந்த கல்வி உள்ளடக்கிய கல்வி திட்டத்தின் கீழ் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களை கண்டறிந்து, பள்ளியில் சேர்ப்பது குறித்த மாபெரும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 14.11.2022 அன்று தொடங்கி உலக மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2022 வரை நடத்த திட்டமிடப்பட்டு சிறப்பாக நடத்தப்பட்டது. முதல் நிகழ்வாக 14.11.2022 அன்று அனைத்துப்பள்ளிகளிலும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களை பள்ளியில் சேர்த்தல் குறித்து உறுதி மொழி மற்றும் விழிப்புணர்வு பேரணி, கலை நிகழ்ச்சி, விளையாட்டு போட்டிகள் போன்றவை நடத்தப்பட்டன. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் உலக மாற்றுத்திறனாளிகள் தினமான 03.12.2022 அன்று செய்கை மொழியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் நிகழ்வினை சென்னையில் துவக்கி வைத்தார். அதனடிப்படையில், இன்றைய தினம் நமது மாவட்டத்தில் செய்கை மொழி தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது. உங்களுக்காக தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள் சிறந்த கல்வியினை கற்று தருகின்றனர். எனவே, மாணவ, மாணவிகளாகிய நீங்கள் கல்வி மற்றும் விளையாட்டில் கவனம் செலுத்தி உயர்ந்த நிலையை அடைய வேண்டும். மேலும், செய்கை மொழியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடிய மாணவ, மாணவியர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன் என கலெக்டர் தெரிவித்தார்.முன்னதாக, கலெக்டர் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளுக்கு வண்ணப்பென்சில்களையும், மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற 4 மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் மலர்விழி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித்துறை) ப்ரியா, நாகஜோதி, மாவட்ட கல்வி அலுவலர் பார்த்தசாரதி, உதவி திட்ட அலுவலர் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் அர்ஜுணன், பிரகாஷ், பள்ளித்தலைமை ஆசிரியர் கிறிஸ்டின் பியூலா, உதவி ஆசிரியர் (செய்கை மொழி) சாந்தி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வானில் இருந்து பாராசூட் மூலம் குதித்து ஊட்டி அரசுக்கல்லூரி மாணவி சாதனை

ஊட்டி, டிச. 06-

விமானப்படை விமானத்தில் 2 கி.மீ உயரத்தில் இருந்து வானில் பாராசூட் மூலம் குதித்து ஊட்டி அரசுக் கல்லூரி மாணவி சாதனை படைத்து உள்ளார்.



### அரசு கல்லூரி மாணவி

சேலம் மாவட்டம் ஓமலூர் ஊமை மாரியம்மன் கோவில் பகுதியை சேர்ந்த சண்முகம்- இளையராணி தம்பதியின் மகள் கோகிலவாணி. இவர் நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள அரசு கல்லூரியில் இளங்கலை சுற்றுலாவியல் துறை 3-ம் ஆண்டு படித்து வருகிறார். இவருக்கு தேசிய மாணவர் படையில் (என்.சி.சி) தீவிர ஆர்வம் இருந்ததால் அது சம்பந்தமான பயிற்சிகளில் பங்கேற்று வந்தார்.

இந்தநிலையில், சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை பாரா கேம்ப பயிற்சியில் தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் பங்கேற்றுள்ளனர். இதில் தமிழகம் சார்பில் பங்கேற்ற ஒரே மாணவியாக கோகிலவாணி இடம் பெற்றுள்ளார். பிரத்யேக விமானத்தில் பயணித்து 2 கிலோ மீட்டர் உயரத்திலிருந்து பாராசூட் மூலம் குதித்து சாகசப் பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார்.

### சாகச முகாம்கள்

இதுகுறித்து 31-வது தமிழ்நாடு தனிப்பிரிவு என்.சி.சி.யின் தலைமை அதிகாரி கர்னல் சீனிவாஸ் கூறியதாவது:-

ஊட்டி அரசு கலைக் கல்லூரியில் 31 தமிழ்நாடு தனிப்பிரிவு என்.சி.சி. மூலம் செயல்படும் தேசிய மாணவர் படையில் 100 மாணவர்கள் இந்திய ராணுவ பயிற்சி பெற்று வருகின்றனர். தேசிய மாணவர் படையில் இந்திய அளவில் பல்வேறு சாகச முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புது டெல்லியில் உள்ள ஆக்ராவில் பாரா முகாம் கடந்த மாதம் நடைபெற்றது. இந்த முகாமில் தமிழகத்திலிருந்து 3 பேர் தேர்வாகினர். அதில் 2 மாணவர்கள், மற்றும் மாணவி கோகிலவாணி தேர்வாகினர். தமிழ்நாடு சார்பில் பங்கேற்ற ஒரே மாணவி இவர்தான். இவ்வாறு அவர் கூறினார்.இந்த நிலையில் மாணவி கோகிலவாணிக்கு, பெற்றோர், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர். மேலும் அவரது சாதனையை சமூக வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.ஊட்டி அரசு கலைக் கல்லூரி தேசிய மாணவர் படை மாணவர்கள் தேசிய மாணவர் படை அலுவலர் லெப்டினன்ட் சு.விஜய் தலைமையில் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு மாவட்டத்தில்

# வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் நிலம் செயலி மென்பொருள் சேவை: அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார்



ஈரோடு,டிச.06-

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 'நிலம் செயலி' மென்பொருள் சேவையினை கலெக்டர் ஹெச்.கி ருஷ் ண னுண்ணி தலைமையில், ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமகன் ஈ.வெ.ரா ஆகியோர் முன்னிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாய வேளாண் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தகவல் தொழில் நுட்பம் மற்றும் மின்னணு சாதனங்களின் பயன்பாடுகள் நிறைந்த தற்போதைய காலகட்டத்தில் அனைத்து துறைகளிலும், அனைத்து வகையான மக்களிடையேயும் இன்றியமையாத அங்கமாக செல்லிடை பேசி செயலிகள் மாறிவிட்டன. ஈரோடு மாவட்டத்தில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தோட்டக்கலை, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், வேளாண் பொறியியல்துறை போன்ற துறைகளின் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்படும் முக்கிய திட்டங்களை பதிவு செய்து ஆவணப்படுத்தவும், அவ்வாறு வழங்கப்பட்ட திட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் உடனுக்குடன் பார்வையிடவும், கண்காணிக்கவும் மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு முயற்சியாக 'நிலம் செயலி' உருவாக்கப்பட்டுள்ளது.

இச் செ ய லி யா னது ஈரோடு மாவட்ட நிர்வாகம், யங் இந்தியன்ஸ் அமைப்பு மற்றும் பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரி மாணவர்கள் குழு ஆகியோரின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ளது. தற்பொழுது உருவாக்கப்பட்டுள்ள நிலம் செயலியானது ஈரோடு மாவட்ட நிர்வாகத்தால் செயல்படுத்தப்படும் திட்டம், தமிழக அரசின் முன்னோடித் திட்டங்களில் முக்கிய திட்டமான 'கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்' ஆகிய திட்டம் கிராம ஊராட்சிகளில் பயன்படுத்தப்படவுள்ளது.

மேலும், இச்செயலியானது பல்வேறு நிலை அலுவலர்களால் பயன்படுத்தப்படவுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட அளவிலான துறை அலுவலர்கள், வட்டார அளவில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை அலுவலர்கள், துணை வேளாண்மை மற்றும் துணை தோட்டக்கலை அலுவலர்கள், கிராம அளவில் உதவி வேளாண்மை அலுவலர்கள், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் (வேளாண் வணிகம்) ஆகியோர்களால் பயன்படுத்தப்படவுள்ளது.

லம் செயலியானது ஈரோடு மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்ட கிராமங்கள் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் பின்வரும் முறையில் பயன்படுத்தப்படவுள்ளது திட்டங்கள் செயல்படுத்தப்படும் 64 கிராமங்களை இச்செயலியில் பதிவேற்றம் செய்தல். இக்கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளின் விபரங்களை கணக்கெடுப்பு செய்து அவர்களின் பெயர், தொலைபேசி எண், பாத்தியப்பட்ட நிலப்பரப்பு, சர்வே எண், பாசன நீர் ஆதாரம், மின் வசதி, நுண்ணீர்ப் பாசனம் அமைக்கப்பட்டுள்ள விபரம், சாகுபடி செய்யும் பயிர்கள் போன்ற விபரங்களை உள்ளீடு செய்து செயலியில் பதிவு செய்தல். இக்கிராமங்களில் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும் துறைவாரியான சேவைகளான நில உரிமை ஆவணங்கள் பெற்று வழங்கல், கிணறு, ஆழ்குழாய் கிணறு, பண்னை குட்டை போன்ற பாசன நீர் ஆதாரங்களை உருவாக்குதல், மின் இணைப்பு பெறுதல், நுண்ணீர் பாசனம் அமைத்தல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு, உயர் விளைச்சல் ரக பயிர் விதைகள் வழங்கல், இயற்கை விவசாய சான்று வழங்கல், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் வழங்கல், கடன் வசதி செய்தல், மற்றும் முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டங்களில் இணைத்தல், வேளாண் விளைபொருட்களுக்கு விற்பனை வசதி ஏற்படுத்துதல் மற்றும் பிற திட்ட சேவைகள் என சேவைகள் ஒவ்வொன்றாக மேற்கொள்ளப்படும் பொழுது அன்றைய தினமே இச்செயலியில் பதிவேற்றம் செய்து பதிவு செய்து கொள்ளலாம்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களின் பட்டியலை சேகரித்து வைத்து கொள்ளுதல் மற்றும் தேவையின்போது நமக்கு காட்டுதல், இக்கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளின் அடிப்படை விபரங்களை சேமித்து வைத்துக் கொள்ளல் மற்றும் நமது பார்வைக்குத் தேவைப்படும்பொழுது காட்டுதல், விவசாயிகளின் அடிப்படை வசதிகளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்துதல். யு1 - நுண்ணீர் பாசன வசதி, மின் இணைப்பு, பாசன நீர் ஆதாரம், நிலவுடைமை ஆவணம் உள்ளவர்கள், யு - மின் இணைப்பு, பாசன நீர் ஆதாரம், நிலவுடைமை ஆவணம் மட்டும் உள்ளவர்கள், டீ - பாசன நீர் ஆதாரம், நிலவுடைமை ஆவணம் மட்டும் உள்ளவர்கள், ஊ - நிலவுடைமை ஆவணம் மட்டுமே உள்ளவர்கள் மற்றும் னு - நிலம் உடையவர்கள் ஆனால் மேற்கண்ட எந்த வசதிகளும் இல்லாதவர்கள். ஒவ்வொரு விவசாயிகளுக்கும் செயல்படுத்திய திட்டங்களை பதிவேற்றம் செய்யப்படுபதை ஏற்று பதிவு கொள்ளல், செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் அக்குறிப்பிட்ட விவசாயியின் நிலை மாற்றத்தினை மேற்கொள்ளுதல் ஊதாரணமாக அறிக்கை வழங்கல், ஒவ்வொரு விவசாயிக்கும் என்னென்ன திட்டங்கள் வழங்கப்பட்டன என்ற அறிக்கை காட்டுதல், ஒவ்வொரு கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட திட்ட சேவை எத்தனை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் காட்டுதல், ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை விவசாயிகளின் நிலை உயர்த் தப் பட் ட டுள் ளது என்ற விபரத்தைக் காட்டும் வகையில் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இச்செயலியானது கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் திட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்படும் திட்ட சேவைகளை பதிவு செய்து ஆவணப்படுத்தவும், இத்திட்டங்களின் முன்னேற்றங்களை உடனுக்குடன் கண்காணித்து ஆய்வு செய்யவும், திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்யவும், ஆலோசனைகள் வழங்கவும், இவற்றின் மூலம் இக்கிராம விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படவும் மிக்க பயனுள்ளதாக அமையும் என வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார். தொடர்ந்து, நிலம் செயலி உருவாக்கிய யங் இந்தியன்ஸ் அமைப்பு மற்றும் கொங்கு பொறியியல் கல்லூரி மாணவர்களை பாராட்டி சான்றிதழ்களை வழங் கி னார்.தொ டர்ந்து, வேளாண்மை - உழவர் நலத்துறையின் சார்பில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டம் தொடர்பாக திட்ட விளக்க பிரச்சார ஊர்தியினையும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும், தமிழ்நாடு அரசு வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் நடப்பு 2022-23ம் ஆண்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்புத் திட்டம்சத்துமிகு சிறுதானியங்கள் என்னும் திட்டம், ஈரோடு மாவட்டத்தில் 91.8 லட்சம் ரூபாயில் செயல்படுத்தப்படவுள்ளது. இதன் ஒரு இனமாக சோளம், கம்பு, இராகி, வரகு, குதிரைவாலி உள்ளிட்ட சத்துமிகு சிறுதானியங்கள் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் 80 இடங்களில் திட்ட விளக்கப் பிரச்சார ஊர்திகள் இயக்கப்படவுள்ளன. இந்த ஊர்திகளில் சோளம், கம்பு, இராகி உள்ளிட்ட சிறுதானியங்களின் சிறப்புகள், மானிய விவரங்கள், பயிர் பாதுகாப்பு, மக்காச்சோள படைப்புழு கட்டுப்பாட்டு முறைகள் உள்ளிட்ட விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சத்துமிகு சிறுதானியங்கள் குறித்தான ஒலி பெருக்கி விளம்பரங்கள் செய்யப்படுவதுடன், அவை தொடர்பான துண்டறிக்கைகளும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.மேலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 14 வட்டாரங்களிலும் முதன்மையாக விவசாயம் செய்யப்படும் கிராமங்களில் இந்த பிரச்சார ஊர்திகள் இயக்கப்படவுள்ளன. மொத்தம் 80 பகுதிகளில் ஊர்திகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்படவுள்ளது. முன்னதாக, தொழிலாளர் உதவி ஆணையர், சமூக பாதுகாப்பு திட்டம் சார்பில் பணியிடத்தில் விபத்தில் மரணமடைந்த 8 கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5,00,000- வீதம் ரூ.40,00,000- மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியின் போது, ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வெ.செல்வராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கஸ்தூரி, இணை இயக்குநர் (வேளாண்மை) சின்னச்சாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) முருகேசன், துணை இயக்குநர்கள் ஆசைத்தம்பி (வேளாண்மை), சண்முகசுந்தரம் (வேளாண்மை மற்றும் விற்பனை வணிகத்துறை), மரகதமணி (தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை) சாவித்திரி (செயலாளர்- வேளாண்விற்பனை குழு), விஸ்வநாதன் (செயற்பெறியாளர் - வேளாண் பொறியியல்துறை), தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) முருகேசன், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



ஜெயலலிதா6ம்ஆண்டுநினைவுநாளையொட்டிமாவட்டஅதிமுகசெயலாளர்கப்பச்சிவினோத் தலைமையிலும் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் சாந்திராமு முன்னிலையில் குன்னூர் நகர பகுதியில் குன்னூர் நகர செயலாளர் சரவணக்குமார் தலைமையிலும் அருவங்காடு பகுதியிலும் நினைவஞ்சலி செலுத்தப்பட்டதோடு எள்ளநள்ளி பகுதியில் பேரூராட்சி செயலாளர் கண்ணபிரான் தலைமையிலும் உதகை நகர பகுதியில் உதகை நகரச்செயலாளர் கசண்முகம் தலைமையிலும் கோத்தகிரி பகுதியில் ஒன்றிய செயலாளர் கம்பட்டிகுமார் பேரூராட்சி செயலாளர் நஞ்சு தலைமையில் நடைபெற்றது.

# ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் தமிழ் புலிகள் கட்சி நிர்வாகிகள் மனு



ஈரோடு டிச.06-

தமிழ் புலிகள் கட்சி ஈரோடு மத்திய மாவட்ட செயலாளர் சிந்தனை செல்வன் மற்றும் நிர்வாகிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஈரோடு மேற்கு மாவட்ட செயலாளர் அம்பேத்கர், கிழக்கு மாவட்ட நிர்வாகி சாதிக் மற்றும் நிர்வாகிகள் தனித்தனியாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்தில் அளித்தகொடுத்திருந்த மனுவில் கூறி இருந்ததாவது:-

பெருந்துறை விஜயமங்கலம் அருகே உள்ள வீரசங்கிலி பகுதியில் தனியார் ஒருவர் அரசு அங்கீகாரம் பெறாமல் கோசாலை நடத்தி வருகிறார். இவர், பெருந்துறை நெடுஞ்சாலையில், மாடுகளை ஏற்றி வரும் வாகனங்களை மறித்து, தன்னுடைய கோசாலைக்கு அவற்றை கொண்டு செல்ல வேண்டும் என்றும், அதற்கு மறுப்பவர்கள் மீது சட்ட விரோதமாக மாடுகளை கடத்துவதாகவும் கூறி மிரட்டுவதுடன், பணம் கேட்டும் மிரட்டி வருகிறார். இதனால் சிறுபான்மையின வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே அவர் மீது வன்கொடுமை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து, அவரிடம் உள்ள மாடுகளை மீட்டு, நியாயமான முறையில் செயல்பட்டு வரும் வேறு கோசாலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்' என்று கூறி இருந்தனர்

# மாற்றுத்திறன் மாணவர்களுக்கான சிறப்பு பயிற்றுனர்கள் கலெக்டரிடம் மனு



ஈரோடு டிச.06-

ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் கிருஷ்ணனுண்ணி தலைமை தாங்கி, பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார். மாற்றுத்திறன் மாணவர்களுக்கான சிறப்பு பயிற்றுனர்கள் மாவட்டத் தலைவர் ஜெ. மஞ்சுநாதன் தலைமையில் நேற்று கொடுத்திருந்த மனுவில் கூறி இருந்ததாவது:

பள்ளி கல்வித்துறையில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வியில் ஈரோடு மாவட்டத்தில் கடந்த 18 ஆண்டுகளாக சிறப்பு பயிற்றுனர்கள், இயன்முறை மருத்துவர்கள், பள்ளி ஆயத்த மைய ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் என 47 பேர் பணியாற்றி வருகிறோம். தற்போது, ஒருங்கிணைந்த பள்ளி கல்வியில் எங்களைப்போல் பணியாற்றி வருபவர்களுக்கு 15 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது வரை ஒரே திட்டத்தில் பணியாற்றி வரும் எங்களுக்கு இதுவரை ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. எனவே, எங்களது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு ஊதிய உயர்வு வழங்கவும், பணி நியமன ஆணையும் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறி இருந்தனர்.

# ஈரோடு எஸ்.வி.என். மெட்ரிக் பள்ளியில் விளையாட்டு விழா



ஈரோடு, டிச.6-

ஈரோடு கொங்கம்பாளையம் சத்திரோட்டில் உள்ள எஸ்.வி.என். மெட்ரிக் மேல்நிலை பள்ளிக்கூடத்தில் 21-வது ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. விழாவுக்கு சரஸ்வதி கல்வி அறக்கட்டளை தலைவர் நல்லா கோவிந்தசாமி தலைமை தாங்கினார். பள்ளிக்கூட தாளாளர் பி.பெரியசாமி, அறக்கட்டளை செயலாளர் எஸ்.தாமரைசெல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் பள்ளிக்கூட முதல்வர் ஜெ.தர்மராஜ் வரவேற்று பேசினார்.விழாவில் வீரப்பன்சத்திரம் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய முதன்மை உதவி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எம்.அனிதாகுமாரி, சித்தோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் சி.முருகையன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு மாணவ-மாணவிகள், பெற்றோருக்கு பரிசுகளை வழங்கி பேசினார்கள். இதில் மாணவ-மாணவிகளுக்கு 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஆகிய ஓட்டப்பந்தயங்கள், கராத்தே, கும்பூ, சிலம்பம் உள்ளிட்ட விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இதேபோல் மாணவ-மாணவிகளின் பெற்றோர்களுக்கும் சிறப்பு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. இந்த விழாவில் ஆசிரிய-ஆசிரியைகள், பள்ளிக்கூட பணியாளர்கள், மாணவ-மாணவிகள், பெற்றோர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர். முடிவில் அறக்கட்டளை பொருளாளர் ஜி.பிரகாஷ் நன்றி கூறினார்.

### அண்டர்-19 டி-20 உலகக்கோப்பை:

# ஷபாலி வர்மா தலைமையிலான இந்திய மகளிர் அணி அறிவிப்பு




**மும்பை, டிச. 06-**

மகளிருக்கான 19 வயதுக் குட்பட்டோருக்கான மகளிர் டி20 உலக கோப்பை கிரிக் கெட் போட்டி முதல் முறை யாக அடுத்த வருடம் தென் ஆப்பிரிக்காவில் நடைபெற வுள்ளது. ஜனவரி 14-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை நடை பெறவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஷபாலி கேப்டன்...**

இந்த டி20 உலக கோப்பை போட்டிக்கு முன்பு இந்திய 19 வயதுக்குட்பட்டோ ருக்கான மகளிர் அணி தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக 5 டி20 போட்டிகளில் பங்கேற் கிறது. இத்தொடர் டிசம்பர் 27 முதல் ஜனவரி 4 வரை நடக் கிறது. இந்த அணிக்கு ஷபாலி வர்மா கேப்டனாக நியமிக் கப்பட்டுள்ளார். ரிச்சா கோஷூம் இந்த அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**மொத்தம் 16 அணிகள்...**

தென் ஆப்பிரிக்காவில் ஏற்கனவே விளையாடிய அனுபவத்துடன் டி20 உலக கோப்பையில் இருவரும் பங் கேற்க வேண்டும் என்பதே பிசிசிஐயின் திட்டமாக உள் ளது. யு19 உலக கோப்பை போட்டியில் 16 அணிகள் பங் கேற்கின்றன. குரூப் டி பிரி வில் இந்தியா, தென் ஆப்பி ரிக்கா ஐக்கிய அரபு அமீரகம் ஸ்காட்லாந்து ஆகிய அணி கள் உள்ளன.

### டாடா ஸ்டீல் செஸ் போட்டி:

# தமிழக வீராங்கனை சாம்பியன்




**சென்னை, டிச. 06-**

டாடா ஸ்டீல் செஸ் இந் தியா 2022 மகளிர் பிளிட்ஸ் போட்டியை தமிழகத்தைச் சேர்ந்த ஆர். வைஷாலி வென்றுள்ளார்.

18 ஆட்டங்களில் 13.5 புள் ளிகளுடன் ஆர். வைஷாலி இப்போட்டியில் முதலிடம் பிடித்தார். மற்ற இந்திய வீராங்கனைகளான ஹரிகா 3-ம் இடத்தையும் ஹம்பி 5-ம் இடத்தையும் பெற்றார்கள். ஆடவர் பிரிவில் இந்தியா வின் அர்ஜூன் எரிகைசி முத லிடம் பிடித்தார். சென்னை செஸ் ஒலிம்பியாடில் 11 ஆட் டங்களில் 5 வெற்றி, ஒரு தோல்வி, 5 டிரா என நன்றாக விளையாடி இந்திய ஏ அணி யின் முக்கிய வீராங்கனை யாக இருந்தார் வைஷாலி. ஒலிம்பியாடில் இந்திய மக ளிர் அணி வெண்கலம் வென் றது. தனிநபர் பிரிவில் வைஷாலிக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

### முதல் டெஸ்ட் போட்டி:

# பாக்.கை வீழ்த்தியது இங்கிலாந்து




**ராவல்பிண்டி, டிச. 06-**

முதல் டெஸ்ட் போட்டி யில் பாக்.கை வீழ்த்தி இங்கி லாந்து அணி வெற்றிப்பெற் றுள்ளது.

**சுற்றுப்பயணம்...**

பாகிஸ்தானில் சுற்றுப்பய ணம் செய்து வரும் இங்கி லாந்து கிரிக்கெட் அணி டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ளது. இரு அணி களுக்கும் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி ராவல்பிண்டியில் நடைபெற் றது. டாஸ் வென்று முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்சில், 657 ரன் கள் குவித்தது. இதற்கு பதி லடி கொடுத்த பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 579 ரன்கள் குவித்தது.

**268 ரன்களில்...**

இரண்டாம் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 7 விக் கெட் இழப்பிற்கு 264 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்ய, பாகிஸ்தான் அணிக்கு 343 ரன் கள் வெற்றி இலக்கு நிர்ண யிக்கப்பட்டது. இந்த இலக்கை துரத்திய பாகிஸ் தான், ஆட்டத்தின் கடைசி நாளான நேற்று 268 ரன்களில் சுருண்டது. சவுத் ஷகில் (74), இமாம் உல் ஹக் (48), முகமது ரிஸ்வான் (46), அசார் அலி (40) ஆகியோர் சிறப்பாக ஆடிய போதும் மற்ற வீரர்கள் சொற்ப ரன்களில் விக் கெட்டை இழந்ததால் இலக்கை எட்ட முடியவில் லை. குறிப்பாக தேநீர் இடை வேளைக்கு பிறகு 11 ரன்கள் மட்டுமே எடுத்த நிலையில், கடைசி 5 விக்கெட்டுகள் சரிந் தன.

74 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற் றது. இரண்டாம் இன்னிங்சில் இங்கிலாந்து தரப்பில் ஜேம்ஸ் ஆண்டர்சன், ஒல்லி ராபின்சன் தலா 4 விக்கெட் எடுத்தனர். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 1-0 என முன்னிலையில் உள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டி 9ம் தேதி தொடங்கு கிறது.

# ராஜஸ்தானில் சிறுவர்களுடன் சேர்ந்து ராகுல் நடை பயணம்



**ஜல்வார், டிச. 06-**

ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை தற்போது ராஜஸ்தானில் நடைபெற்று வருகிறது.

ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை (நடை பயணம்) தற்போது ராஜஸ்தானில் நடை பெற்று வருகிறது. 89-வது நாளாக ராகுல் காந்தியின் பாரத் ஜோடோ யாத்திரை நடைபெற்று வருகிறது. நேற்று ஜலவார் மாவட்டத் தில் அம்மாநில முதல்வர் அசோக் கெலாட்டுடன் ராகுல் காந்தி நடைபயணம் மேற்கொண்டர். அவருடன் சச்சின் பைலட்டும் உடன் சென்றார்.

காலை 6.10 மணிக்கே இந்த யாத்திரை தொடங்கி யது. 13 டிகிரி செல்சியஸ் மட் டுமே வெப்ப நிலை இருந் தது. தனது யாத்திரையின் போது, அங்கு இருந்த குழந் தைகளுடன் ராகுல் காந்தி பேசினார். அதேபோல் தனது யாத்திரையின் போது அங்கி ருந்த தாபா ஒன்றில் தேநீரை யும் ராகுல் காந்தி அருந்தி னார்.

# டெல்லி மாநகராட்சியை கைப்பற்றுகிறது ஆம் ஆத்மி

### தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்பில் தகவல்

**புதுடெல்லி, டிச. 06-**

டெல்லி மாநகராட்சியில் உள்ள மொத்தம் உள்ள 250 வார் டுகளுக்கு நேற்று தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் 8-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறி விக்கப்பட உள்ளது. இந்நிலையில் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு வெளியாகி உள்ளது. அதன் முழு விபரம் வருமாறு:

**ஆஜ் தக் செய்தி நிறுவனம்:-**

1) ஆம் ஆத்மி 149 முதல் 171 இடங்களில் வெற்றி.
2) பாஜக - 69 முதல் 91 இடங்களில் வெற்றி.
3) காங்கிரஸ் - 3 முதல் 7 இடங்களில் வெற்றி.

**நியூஸ் எக்ஸ் செய்தி நிறுவனம்:-**

1) ஆம் ஆத்மி - 159 முதல் 175 இடங்களில் வெற்றி.
2) பாஜக - 70 முதல் 92 இடங்களில் வெற்றி.
3) காங்கிரஸ் - 4 முதல் 7 இடங்களில் வெற்றி.

**டைம்ஸ் நவ் செய்தி நிறுவனம்:-**

1) ஆம் ஆத்மி - 146 முதல் 156 இடங்களில் வெற்றி.
2) பாஜக - 84 முதல் 94 இடங்களில் வெற்றி.
3) காங்கிரஸ் - 6 முதல் 10 இடங்களில் வெற்றி.

பெரும்பாலான செய்தி நிறுவனங்களில் கருத்துக்கணிப்பு அடிப்படையில் டெல்லி மாநகராட்சி தேர்தலில் ஆம் ஆத்மி வெற்றி பெறும் என தெரிய வந்துள்ளது

# ரொனால்டோவை திட்டியதால் சர்ச்சை

போர்ச்சுகல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோவை தென் கொரிய கால்பந்து வீரர் திட்டிய தால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்ற லீக் ஆட்டத்தில் போர்ச்சுகல் 2-1 என்ற கணக்கில் தென்கொரியாவை வென்றது. இந்த போட்டியின்போது 45 நிமிடங்களுக்கு பிறகு அளிக்கப்பட்ட ஓய்வு சமயத்தில் ரொனால்டோவை தென்கொரிய வீரர் ஒருவர் திட்டியதாக போர்ச்சுகல் அணியின் பயிற்சியாளர் பெர்னாண்டோ சாண் டஸ் புகார் அளித்துள்ளார். இது சர்ச்சையை ஏழுப்பியுள்ளது.

ரொனால்டோவை பார்த்து அந்த தென் கொரிய வீரர் சீக் கிரம் போ என கோபத்தில் சத்தமிட்டதாகத் தெரிகிறது. இது குறித்து செய்தியாளர் சந்திப்பின்போது ரொனால்டோ கூறும் போது, "நான் அவரை (தென் கொரிய வீரர்) அமைதியாக இருக்க சொன்னேன். எனக்கு கட்டளையிட அவருக்கு எந்த உரிமையும் இல்லை" என்றார். இந்த விவகாரம் சர்ச்சையை எழுப்பியுள்ளது.

# காயத்தால் பிரபல இங்கிலாந்து வீரர் இன்று நாடு திரும்புகிறார்

பிரபல இங்கிலாந்து வீரர் லியம் லிவிங்ஸ்டன், இங்கி லாந்து அணிக்காக 12 ஒருநாள், 29 டி20 ஆட்டங்களில் விளை யாடியுள்ளார். 62 முதல்தர ஆட்டங்களில் விளையாடியுள்ள லிவிங்ஸ்டன், பாகிஸ்தானுக்கு எதிரான ராவல்பிண்டி டெஸ்டில் அறிமுகமானார். முதல் இன்னிங்ஸில் 9 ரன்களும் 2-வது இன்னிங்ஸில் 7 ரன்களும் எடுத்தார்.


2-வது நாளன்று பாகிஸ்தான் இன்னிங்ஸில் ஃபீல்டிங் செய்தபோது கால் முட்டியில் அவருக்குக் காயம் ஏற்பட் டது. இதனால் பாகிஸ்தான் இன்னிங்ஸ் முழுக்க அவர் ஃ பீல்டிங் செய்ய வரவில்லை. இங்கிலாந்தின் 2-வது இன்னிங் ஸில் மிகுந்த சிரமத்துடன் ஓடி 7 ரன்கள் எடுத்தார். இந்நிலை யில் காயம் தீவிரமாக உள்ளதால் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து லிவிங்ஸ்டன் விலகியுள்ளார். இங் கிலாந்துக்கு இன்று திரும்பும் லிவிங்ஸ்டன் மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளவுள்ளார்.

# ராகுல், வாஷிங்டன் சுந்தர் குறித்து தினேஷ் கார்த்திக் கூறியது என்ன?

இந்தியா - வங்காளதேசம் இடையேயான முதல் ஒரு நாள் போட்டி டாக்காவில் நடைபெற்றது. இந்த போட்டி யில் கேஎல் ராகுல், வாஷிங்டன் சுந்தர் தவறவிட்ட கேட்ச் இந்திய அணியின் தோல்விக்கு வழிவகுத்துள்ளது. அடுத்த டுத்து 2 கேட்ச் வாய்ப்புகள் நழுவிய நிலையில் அதிரடியாக விளையாடிய ஹசன் வங்காளதேச வெற்றிக்கு வழிவகுத் தார். வங்காளதேசத்திற்கு எதிரான முதல் போட்டியில் தோல் வியடைந்த நிலையில் இந்திய அணி மீதும் கேப்டன் ரோகித் சர்மா மீதும் கேட்சை தவறவிட்ட கேஎல் ராகுல், கேட்ச் பிடிக்க முயற்சிக்காத வாஷிங்டன் சுந்தர் மீதும் சமூ கவலைதளங்களில் ரசிகர்கள் கடும் விமர்சனங்களை முன் வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், கேஎல் ராகுல், வாஷிங்டன் சுந்தர் தவற விட்ட கேட்ச், இந்திய அணியின் தோல்வி குறித்து தினேஷ் கார்த்திக் கருத்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தினேஷ் கார்த்திக் கூறுகையில், வெளிப்படையாக கூறவேண்டுமா னால் இறுதிகட்டத்தில் கேஎல் ராகுல் தவறவிட்ட கேட்ச், வாஷிங்டன் சுந்தர் கேட்ச் பிடிக்க முயற்சிக்கவில்லை. அவர் கேட்ச் பிடிக்க முயற்சிக்காதது ஏன் என்று தெரியவில்லை. லைட் வெளிச்சம் காரணமாக இருக்கலாம் எனக்கு தெரிய வில்லை. ஆனால், அவர் பந்தை பார்த்திருந்தால் கேட்ச் பிடிக்க வந்திருக்க வேண்டும். அந்த கேள்விக்கு சுந்தர் தான் பதில் அளிக்கவேண்டும். ஒட்டுமொத்தமாக பீல்டிங் தரம் 50-50 (பாதிக்கு பாதி). பீல்டிங்கின் சிறந்த நாளும் அல்ல மோசமான நாளும் அல்ல. கடைசி நேரத்தில் அழுத்தம் கார ணமாக நாம் சில பவுண்டரிகளையும் விட்டோம் என்று நான் நினைக்கிறேன்' என்றார்.

# ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு அணியில் இடம் கிடைப்பது கடினம் - அஸ்வின்



நடந்து முடிந்த விஜய் ஹசாரே கோப்பையில் 9 சதங்கள் அடித்து இந் திய கிரிக்கெட் ரசிகர்களை திரும்பி பார்க்கவைத்தார். ஆனாலும் அவர் இடம்பெற்ற மகாராஷ்டிரா அணி இறு திப் போட்டியில் தோல்வி அடைந்து கோப்பை வெல்லும் வாய்ப்பை இழந் தது. மொத்தமாக 11 சதங்களை அடித் துள்ள அவர் விஜய் ஹசாரே கோப்பை வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த பேட்ஸ்மனாகவும் வர லாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

ஆனாலும் கடுமையான போட்டி நிறைந்த இந்திய அணி யில் யாருக்கு பதில் ருதுராஜ் கைக்வாட் வாய்ப்பு பெறுவார் என்று தெரிவிக்கும் ரவிச்சந்திரன் அஷ்வின் அதன் காரண மாகவே தற்சமயத்தில் அவருக்கு வாய்ப்பு கிடைப்பது கடி னம் என்று கூறியுள்ளார். இது பற்றி தனது யூடியூப் பக்கத் தில் அவர் பேசியது பின்வருமாறு. அவர் இந்தியாவைச் சேர்ந்தவர் என்றாலும் யாருக்கு பதில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கும்? யாருக்கு பதில் என்பதை விட அவர் யாருடன் போட்டி போடுகிறார் என்பதை பாருங்கள். ஷிகர் தவான், ரோஹித் சர்மா, சுப்மன் கில் இவர்களுடன் ரிஷப் பண்ட் டும் ஓப்பனிங்கில் களமிறங்குகிறார். மேலும் இந்தியா கிரிக் கெட் விளையாடுவதற்கு ஒரு மிகவும் கடினமான ஒரு நாடா கும்.

### உலகளவில் இந்தியா அளித்துள்ள


# உத்தரவாதங்களைக் காப்பாற்ற தமிழகம் உறுதுணையாக இருக்கும்

### ஜி-20 ஆலோசனை கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

**புதுடெல்லி, டிச. 06-**

உலகளவில் இந்தியா அளித்துள்ள உத்தரவாதங்க ளைக் காப்பாற்றத் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும் என்று ஜி-20 மாநாடு தொடர் பான ஆலோசனை கூட்டத் தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

ஜி-20 உச்சி மாநாடு தொடர்பாக டெல்லியில் அனைத்து கட்சி தலைவர்கள் பங்கேற்கும் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற் றது. பிரதமர் மோடி தலை மையில் நடைபெறும் ஆலோ சனை கூட்டத்தில் மத்திய மந் திரிகள் அமிதஷா, நிர்மலா சீதாராமன், ஜெய்சங்கர், பிரகா லத் தோஷி, முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனி சாமி, மம்தா பானர்ஜி, ஏக்நாத் ஷிண்டே உள்ளிட்ட அனைத் துக்கட்சி தலைவர்களும் பங் கேற்றனர்.



நாடு முழுவதும் நடை பெற உள்ள ஜி-20 துணை மாநாட்டின் சாராம்சங்கள் குறித்து அனைத்துக்கட்சி தலைவர்கள் ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப்பட் டதாக கூறப்படுகிறது. ஜி 20 ஆலோசனைக் கூட்டத்தில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டா லின் உரையாற்றியதாவது:-

காலநிலை மாற்றத்தை தடுக்க இந்திய அரசின் இலக் குகளை எட்ட தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இயற்கை பாது காப்பு காலநிலை மாற்றத்தை கையாள தமிழ்நாடு 'பசுமை காலநிலை நிறுவனத்தை' உருவாக்கி உள்ளோம். உலக ளவில் இந்தியா அளித்துள்ள உத்தரவாதங்களைக் காப்பாற றத் தமிழ்நாடு உறுதுணை யாக இருக்கும். இந்தியாவின் பெருமையை உலகிற்கு பறைசாற்றுவோம். இந்தியா ஜி 20-க்கு தலைமை ஏற்றுள்ள நிலையில், தமிழ்நாடு முழு ஆதரவையும் ஒத்துழைப்பை யும் நல்கும். அகிம்சை, நல்லி ணக்கம், சமத்துவம் உள்ளிட் டவைகளை உலக அளவில் கொண்டு செல்ல இந்த வாய்ப்பினை பிரதமர் பயன் படுத்தி கொள்வார் என நம்பு கிறேன். இவ்வாறு அவர் கூறி னார்.

### ரஷியாவிடம் இருந்து

# இந்தியாவை விட ஐரோப்பிய யூனியன் கூடுதலாக கச்சா எண்ணெய் இறக்குமதி

### மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தகவல்

**புதுடெல்லி, டிச. 06-**

இந்தியாவை விட ரஷி யாவிடம் இருந்து ஐரோப் பிய யூனியன் நாடுகள் கச்சா எண்ணெய்யை 6 மடங்கு கூடுதலாக இறக்குமதி செய் துள்ளன என மத்திய மந்திரி ஜெய்சங்கர் டெல்லியில் நேற்று கூறியுள்ளார்.

ஜெர்மனி வெளியுறவு மந்திரி அன்னாலேனா பேயர்போக் இந்தியாவில் நேற்றும், இன்றும் என 2 நாட்கள் அதிகாரப்பூர்வ சுற் றுப்பயணம் மேற்கொள்கி றார். டெல்லியில் தங்கிய பேயர்போக்குக்கு, மத்திய வெளிவிவகார மந்திரி ஜெய் சங்கர் விருந்தளித்து கவுர வித்தார்.

நேற்று நடந்த இரு நாட்டு வெளியுறவு மந்திரிக ளின் சந்திப்பில், நாடுக ளுக்கு இடையேயான இரு தரப்பு உறவுகள் பற்றி ஆலோ சனை நடத்தப்படும். இருத ரப்பு விவகாரங்கள், பிராந் திய மற்றும் சர்வதேச விவ காரங்கள், உக்ரைன் விவகா ரம், இந்தோ-பசிபிக் பிராந் திய விவகாரம் மற்றும் ஆப் கானிஸ்தானின் வளர்ச்சி பணிகள் ஆகியவை தொடர் புடைய விரிவான விவகா ரங்கள் பற்றிய ஆலோசனை களில் அவர்கள் ஈடுபட்ட னர்.

இதனை தொடர்ந்து, டெல்லியில் இருவரும் கூட் டாக பத்திரிகையாளர் சந் திப்பை நேற்று நடத்தினர். இதில் பேசிய மத்திய மந் திரி ஜெய்சங்கர், ஐ.நா. பாது காப்பு கவுன்சிலில் சீர்திருத் தங்கள் மற்றும் இந்தியா வின் ஜி-20 தலைமைத்துவம் உள்ளிட்ட பலதரப்பு விவகா ரங்களை பற்றி பேசினோம் என கூறினார்.

இதனை தொடர்ந்து பேசிய மந்திரி ஜெய்சங்கர், கடந்த பிப்ரவரி முதல் நவம் பர் வரையிலான காலகட்டத் தில் ரஷியாவிடம் இருந்து ஐரோப்பிய யூனியன் அதிக அளவில் எரிபொருள் வாங் கியுள்ளது. பிற 10 நாடுகள் இணைந்து வாங்கிய எரிபொ ருளை விட அது அதிகம். கச்சா எண்ணெய்யை இந் தியா இறக்குமதி செய்த அளவை விட 6 மடங்கு கூடு தலாக ஐரோப்பிய யூனியன் இறக்குமதி செய்துள்ளது. எரிவாயு விவகாரத்தில் அது (ஐரோப்பிய யூனியன்) முடி வில்லாத அளவுக்கு வாங்கி யுள்ளது.

ஏனெனில், எரிவாயுவை நாங்கள் இறக்குமதி செய்ய வில்லை என கூறியுள்ளார். நீங்கள் இதற்காக உள்ள ரஷி யாவின் எரிபொருள் பற்றிய கண்காணிப்புக்கான வலைத ளத்தில் சென்று நீங்கள் ஆய்வு செய்து கொள்ளும் படி கேட்டு கொள்கிறேன். அந்த வலைதளத்தில், என்ன என்னவற்றை, எந்தெந்த நாடுகள் எல்லாம் இறக்கு மதி செய்துள்ளன என்பது பற்றிய விரிவான விவரங் கள் அடங்கியுள்ளன. அது மிக மிக உதவியாக இருக் கும் என்று அவர் கூறியுள் ளார்.

# 10 சதவீத இட ஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்து தி.மு.க சீராய்வு மனு தாக்கல்

**புதுடெல்லி, டிச. 06-**

உயர்சாதி ஏழைகளுக் கான 10 சதவீத இட ஒதுக்கீடு வழக்கில் உச்சநீதிமன்றத்தில் திமுக சார்பில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் பின் தங்கிய உயர் வகுப்பினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப் பில் 10 சதவீதம் கூடுதல் இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டம் கடந்த 2019ம் ஆண்டு நிறை வேற்றப்பட்டது. இது பெரும் பான்மையுடன் நாடாளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதி ஒப்புதலுடன் அம லில் உள்ளது. இதனை எதிர்த்து, 'யூத்பார் ஈகுவாலிட் டி' என்ற அமைப்பு உள் ளிட்ட பலர் உச்ச நீதிமன்றத் தில் வழக்கு தொடர்ந்தனர். அதேபோன்று தமிழகத்தில் திமுக சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் உள் ளிட்டோரும் இந்த வழக்கில் இடையீட்டு மனுதாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கில் கடந்த நவம்பர் 7-ம் தேதி, 5 நீதிபதி கள் கொண்ட அமர்வில் 3 பேர் இடஒதுக்கீட்டுக்கு ஆத ரவாகவும், 2 பேர் எதிராகவும் தீர்ப்பளித்தனர். இதனால், 5 நீதிபதிகளில் மூன்று நீதிபதி கள் மத்திய அரசு கொண்டு வந்த சட்டம் செல்லும் என்று பெரும்பான்மையான தீர்ப்பு வழங்கியுள்ளதால், பொருளா தாரத்தில் பின் தங்கிய உயர் வகுப்பினருக்கு வழங்கப் பட்ட கூடுதல் 10 சதவீத இட ஒதுக்கீட்டு விவகாரத்தில் மத் திய அரசு கொண்டு வந்துள்ள அரசாணை சட்டம் செல்லும் என்பது உறுதியாகி உள்ளது.

இதற்கு பல்வேறு அரசி யல் கட்சித் தலைவர்கள் குறிப்பாக எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதனிடையே தமிழக முதல் வர் மு.க.ஸ்டாலின் தலைமை யில் நவம்பர் 12 ம் தேதி தலைமை செயலகத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்நிலையில் 10 சதவீத இட ஒதுக்கீடு வழக் கில் உச்சநீதிமன்றத்தில் திமுக சார்பில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவில், இந்த இட ஒதுக்கீடு என்பது ஒட்டு மொத்த இந்திய மக்களுக்கும் எதிரானது என்ற கடுமையான வாதத்தை முன்வைத்துள்ளது. இந்த வழக்கை திறந்தவெளி வழக்கு விசாரணையாக நடத் தவேண்டும் கோரிக்கை வைக்கப்பட்டு உள்ளது. பொதுவாக சீராய்வு மனுக் கள் நீதிபதியின் அறையில் வைத்து நடைபெறும். ஆனால் அப்படி நடக்கக்கூ டாது என்ற முக்கியமான கோரிக்கையையும் திமுக முன்வைத்துள்ளது.

இது எஸ்.சி, எஸ்.டி மற் றும் ஓபிசி பிரிவினரிடையே பாகுபாட்டை உருவாக்கக்கூ டியதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டையும் முன் வைத்துள்ளது. அரசியல் சாச னம் வழங்கியுள்ள அடிப் படை விதிகளுக்கும், நெறிமு றைகளுக்கும் எதிராக இந்த இட ஒதுக்கீடு இருக்கிறது என்பதையும் திமுக சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மனு மீது விரைவில் விசாரணை தொடங்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

# ஜெயலலிதா நினைவிடத்தில் ஓ.பன்னீர் செல்வம் மரியாதை

**சென்னை, டிச. 06-**

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவு தினத்தையொட்டி சென்னை மெரினாவில் உள்ள அவரது நினைவிடத்தில் ஓ. பன்னீர் செல்வம் மரியாதை செலுத்தி னார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-வது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி சென்னை மெரினா கடற்கரையில் எம்.ஜி.ஆர். நினைவிடம் அருகில் அமைந்துள்ள ஜெயலலிதா நினைவிடம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந் தது. இந்நிலையில் நேற்று காலை 10.30 மணியளவில் ஓ.பன்னீர் செல்வம் தனது ஆதரவாளர்களுடன் பேரணி யாக வந்து மலர் தூவி மரி யாதை செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து ஜெய லலிதா நினைவிடத்தில் அருங்காட்சியகம் அருகில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்றபடி ஓ. பன் னீர் செல்வம் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். இதில் வைத்தியலிங்கம், மனோஜ் பாண்டியன், ஜே.சி.டி.பிரபா கர், மாவட்ட தலைவர்கள் சைதை எம்.எம்.பாபு, ரெட் சன் அம்பிகாபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



ஜி-20 மாநாடு தொடர்பான அனைத்துக்கட்சி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக புதுடெல்லிக்கு நேற்று வருகை தந்த, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை, புதுடெல்லி விமான நிலையத்தில், எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, கனிமொழி, திருச்சி சிவா, தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

# குஜராத்தில் மீண்டும் ஆட்சியை கைப்பற்றுமா பாரதிய ஜனதா?

## தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பு வெளியீடு

காந்திநகர், டிச.06- குஜராத்தில் பா.ஜ.க. மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் என்று தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன. இமாச்சல்லில் யாருக்கும் பெருபான்மை கிடைக்காது என்றும் கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன.

182 தொகுதிகளை கொண்ட குஜராத் சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது.

1-ம் தேதி முதற்கட்ட தேர்தல் நடைபெற்ற நிலையில் நேற்று 2-ம் கட்ட தேர்தல் நடைபெற்றது. அதேபோல், 68 தொகுதிகளை கொண்ட இமாசலபிரதேசத்திற்கு கடந்த 12-ம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெற்றது.

மேலும், 250 வார்டுகளுக்கான டெல்லி மாநகராட்சி தேர்தல் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுக்கு வந்த நிலையில் தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகளை பல்வேறு செய்தி நிறுவனங்கள் வெளியிட்டு வருகின்றன.

ஆங்கில/இந்தி செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட தேர்தலுக்கு பிந்தைய கருத்துகணிப்புகள் பின்வருமாறு:-

குஜராத் - மொத்த தொகுதிகள் 182 - பெரும்பான்மைக்கு 92 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்.

### குஜராத் தேர்தல்:

### நியூஸ் எக்ஸ் செய்தி நிறுவனம்

1) பாஜக - 117 முதல் 140இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் கூட்டணி - 34 முதல் 51 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி - 6 முதல் 13 இடங்களில் வெற்றி.

### ரிபப்ளிக் டிவி செய்தி நிறுவனம்

1) பாஜக - 128 முதல் 148இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் - 30 முதல் 42 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி - 2 முதல் 10 இடங்களில் வெற்றி.

### டிவி 9 குஜராத்தி செய்தி நிறுவனம்

1) பாஜக - 125 முதல் 130இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் கூட்டணி - 40 முதல் 50 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி-3 முதல் 5 இடங்களில் வெற்றி.

### என்டி டிவி செய்தி நிறுவனம்

1) பாஜக - 131 இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் கூட்டணி - 41 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி - 10 இடங்களில் வெற்றி.

பெரும்பாலான செய்தி நிறுவனங்களில் கருத்துக் கணிப்பு அடிப்படையில் குஜராத்தில் பாஜக வெற்றிபெறலாம்.

இமாச்சலபிரதேசத்தில் 68 தொகுதிகள் உள்ளன. பெரும்பான்மைக்கு 35 இடங்களில் வெற்றி பெற வேண்டும்.

### இமாச்சலபிரதேச தேர்தல்:

### ஆஜ் தக் செய்தி நிறுவனம்

1) பாஜக - 24 முதல் 34 இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் - 30 முதல் 40 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி - 0.

இந்தியா டிவி செய்தி நிறுவனம்

1) பாஜக - 35 முதல் 40 இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் - 26 முதல் 31 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி - 0.

### நியூஸ் எக்ஸ் செய்தி நிறுவனம்

1) பாஜக - 32 முதல் 40 இடங்களில் வெற்றி

2) காங்கிரஸ் - 27 முதல் 34 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி - 0.

### ரிபப்ளிக் டிவி செய்தி நிறுவனம்

1) பாஜக - 34 முதல் 39 இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் - 28 முதல் 33 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி-0 முதல் 1 இடத்தில் வெற்றி.

### என்டி டிவி செய்தி நிறுவனம்

1) பாஜக - 37 இடங்களில் வெற்றி.

2) காங்கிரஸ் - 30 இடங்களில் வெற்றி.

3) ஆம் ஆத்மி-0 முதல் 1 இடத்தில் வெற்றி.

பெரும்பாலான செய்தி நிறுவனங்களில் கருத்துக் கணிப்பு அடிப்படையில் இமாச்சலபிரதேசத்தில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி நீடிக்கலாம்.

# தமிழகம் முழுவதும் பாதுகாப்பு...(1-ம் பக்க தொடர்ச்சி)

கண்காணிக்க போலீசார் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலில் இன்று நடைபெறும் தீபத்திருவிழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொள்கிறார்.

மேலும் சில முக்கிய பிரமுகர்களும் பங்கேற்பதால் அங்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக டிஜிபி சைலேந்திர பாபு திருவண்ணாமலையில் முகாமிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வு செய்து வருகிறார்.

அனுமதிச்சீட்டு இருக்கும் பக்தர்களை மட்டுமே கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. திருவண்ணாமலை பேருந்து நிலையங்களிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

கோவை கார் வெடிப்பு சம்பவம், மங்களூரு குக்கர் வெடிகுண்டு வெடிப்பு ஆகியவற்றால் இந்த முறை கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் போலீசார் விழிப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் இரவு ரோந்து பணிகள், வாகன தணிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அந்தந்த மாவட்ட கண்காணிப்பாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.



மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு நாளையொட்டி, நேற்று சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, நேற்று முன்னாள் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அருகில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# ரேசன் கடைகள் மூலம் பொங்கல் ரொக்கப்பணம் ரூ.1000 கொடுக்க ஏற்பாடு

சென்னை, டிச. 06- வருகிற பொங்கல் பண்டிகைக்கு ரொக்கப் பணம் ரூ.1000 ரேசன் கடையில் கொடுக்க தமிழக அரசு தீவர ஏற்பாடு செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், ரூ.1000 ரொக்கப் பணத்துடன் பரிசுத் தொகுப்பாக பச்சரிசியுடன் சர்க்கரை, முந்திரி, ஏலக்காய், ஆவின் நெய் ஆகியவை வழங்கலாமா? என்றும் ஆலோசிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டு பொங்கல் பண்டிகைக்கும் ரேஷன் கடைகளில் ரொக்கப் பணத்துடன் பொங்கல் தொகுப்பு வழங்குவது வழக்கமாக உள்ளது. கடந்த ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகும் ரேசன் கடைகளில் அரிசி, வெல்லம், கரும்பு, ஏலக்காய், முந்திரி, திராட்சை உள்ளிட்ட 21 பொருட்கள் வழங்கப்பட்டது.

இந்த பொருட்களின் தரம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. பல ரேசன் கடைகளில் ஒழுகிய வெல்லம் வழங்கப்பட்டதால் எதிர்க்கட்சியினர் அரசு மீது குறை கூறினார்கள். மற்ற பொருட்களின் எடையும் குறைவாக இருந்ததாக விமர்சனம் வைக்கப்பட்டது. இதனால் வருகிற பொங்கல் பண்டிகைக்கு ரூ.1000 ரொக்கப் பணத்துடன் பரிசுத் தொகுப்பாக பச்சரிசியுடன் சர்க்கரை, முந்திரி, ஏலக்காய், ஆவின் நெய் ஆகியவை வழங்கலாமா? என்றும் ஆலோசிக்கப்படுகிறது.

பணமாக கொடுக்கும் பட்சத்தில் ரூ.1000 ரொக்கப் பணத்தை ரேசன் கார்டுதாரர்களின் வங்கிக் கணக்கு மூலம் வழங்கினால் எளிதாக இருக்கும் என்று நிதித்துறை கருத்து தெரிவித்து இருந்தது. ஆனால் ரூ.2 கோடியே 23 லட்சம் ரேஷன் கார்டுகளில் 14 லட்சத்து 86 ஆயிரத்து 582 கார்டுக்கு வங்கி கணக்கு இல்லாதது மட்டுமின்றி ஆதார் எண் இணைக்கப்படாமல் இருந்தது. இதை பூர்த்தி செய்தால் தான் வங்கிக் கணக்கு மூலம் பணம் போட முடியும் என்ற நிலை உருவாகி உள்ளது.

இதனால்தான் கூட்டுறவு துறை வெளியிட்ட அறிவிப்பில் ரேசன் கார்டுதாரர்களுக்கு வங்கிக் கணக்கு இருந்தால் அதை ஆதார் எண்ணுடன் இணைக்க வேண்டும் என்று கூறி இருந்தது. ஆனாலும் இன்னும் அந்தப் பணி முழுமையாக முடிவடையவில்லை. இந்த பணிகள் ஒருபுறம் நடைபெற்று கொண்டிருக்கும் நிலையில், ரூ.1000 ரொக்கப் பணத்தை ரேசன் கடை மூலம் பொதுமக்களுக்கு கையில் நேரில் கொடுப்பதுதான் சிறந்தது என்று அதிகாரிகள் தரப்பில் கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.

ரேசன் கடைகளின் மூலமாக ரொக்க பணத்தை கொடுப்பதின் மூலம் மக்கள் பிரதிநிதிகள் அதை அருகே இருந்து கவனித்துக் கொள்வார்கள் என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் பொங்கல் பரிசுப் பணம் இந்த முறை ரேசன் கடைகளில்தான் வழங்கப்படும் என தெரிகிறது. அது மட்டுமின்றி பொங்கல் பரிசு தொகுப்புடன் கரும்பு இடம் பெற வாய்ப்பில்லை என தெரிகிறது.

ஆனாலும் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு அரசின் சார்பில் இன்னும் வெளியாகவில்லை.

# குஜராத் தேர்தல்: 58.68 சதவீத வாக்குகள் பதிவு: தேர்தல் ஆணையம்

காந்தி நகர், டிச.06- குஜராத் சட்டசபை தேர்தலில் மொத்தம் 58.68 சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட குஜராத் மாநில சட்டசபை தேர்தல் 2 கட்டங்களாக நடைபெற்றது. 182 சட்டசபை தொகுதிகளில் முதல் கட்டமாக 89 தொகுதிகளுக்கு கடந்த 1-ம் தேதி தேர்தல் நடைபெற்றது. எஞ்சிய 93 தொகுதிகளுக்கு நேற்றஉ 2-ம் கட்ட தேர்தல் நடைபெற்றது. காலை 8 மணிக்கு தேர்தல் தொடங்கிய நிலையில் மக்கள் ஆர்வமாக வந்து வாக்களித்து சென்றனர்.

மாலை 3 மணி வரை 50.51 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

இந்நிலையில், குஜராத் மாநில சட்டசபை தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ளது. காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது.

குஜராத சட்டசபை 2-ம் கட்ட தேர்தலில் 58.68 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

# அடுத்த 3 நாட்களில் புயலாக...(1-ம் பக்க தொடர்ச்சி)

திருவள்ளூர், சென்னை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக் கூடும்.

ஓரிரு இடங்களில் அதிகனமழை (ரெட் அலர்ட்) பெய்யவாய்ப்புள்ளது. இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை: அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்தில் நாளை (நவ.7) ஆகிய 2 நாட்களில் வீசக்கூடும்.

தென்கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் 3 நாட்களுக்கு வீசக்கூடும். மன்னார் வளைகுடா பகுதிகள்களில் 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக் கூடும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.



சென்னை தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தில் பணிக்காலத்தின்போது உயிரிழந்த அலுவலர்களின் வாரிசுதாரர்கள் 6 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை, அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் இயக்குநர் சிஜிதாமஸ் வைத்யன், செயலாளர் வி.அருண்ராய், இயக்குநர் சோ.மதுமதி உடனிருந்தனர்.



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 6-ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் வடக்குமாசி வீதி, மேலமாசிவீதி சந்திப்பில், மாநகர மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மெழுகுவர்த்தி ஏந்தி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது இதில் மாவட்ட பகுதி வட்ட சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.